


# செந்தமிழ்

| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு ௨௲௨ புரட். | பகுதி |
| --- | --- | --- |
| ௬௭ | செப்டம்பர்—1971 | ௧ |


## தமிழ்க் கிளவி


**இரா. கோதண்டராமன், எம். ஏ. (தமிழ்). எம், ஏ., (மொழியியல்)**

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.


தமிழில் வழங்கும் சொற்களை அவற்றின் அமைப்பின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். வகரம் நீங்கிய ஏனைய இடையொற்றுக்கள் ஈற்றில் நிகழ நிற்கும் ஓரசைச் சொற்கள் அனைத்தும் முதற் பிரிவில் அடங்கும். எ-டு. கால், நாய், கூர், வாள், வாழ். வகரம் பகரத்தின் திரிபாகக் கொள்ளத்தக்க தாதலால் அவ், இவ், எவ் போன்ற சொற்களை இப்பிரிவில் கொள்வதற்கில்லை. மெல்லொற்றுக்களை ஈற்றில் கொண்ட ஓரசைச் சொற்களைப் பொறுத்த வரையில் உம் என்னும் கிளவி

மட்டுமே கருத்தில் கொள்ளத் தக்கதாகத் தோன்றுகின்றது.[1] பகுதிகளை அடுத்து விகுதியாகவே நிகழும் உம்மைக்கிளவி தானே பகுதியாகவும் நிகழ்ந்திருக்குமா என்பது குறித்துத் திட்ட வட்ட மாகக் கூறமுடியவில்லை. முன்னிலை ஒருமையில் வேற்றுமைப் பகுதி (Casal Base) யாக நிகழும் ஓர் இடத்தைத் தவிர உம்மைக் கிளவி வேறெங்கும் பகுதியாக நடைபெறுவதாகத் தோன்ற வில்லை. நாம், நம், யாம், எம், நும், தாம், தம் ஆகிய இடப் பெயர்களின் அமைப்பு இன்னும் முறையாக ஆராயப்பெறவில்லை யாதலால் அவற்றை இப்போதைக்கு மகர ஈற்று ஓரசைச் சொற் களாகக் கொள்வதற்கில்லை. மெல்லொலிகளாகிய னகர, ணகர ஈற்று ஓரசைச் சொற்களும் வழக்கில் உளவேனும் அவற்றின் இறுதி வேர்ச்சொற்கள் (Ultimate Roots) லகர ளகர இடை யொற்றுக்களை ஈற்றில் கொண்டியல்வனவாகக் கருதலாம்.

இடையீற்று ஓரசைச் சொற்கள் உயிர் முதலாகிய விகுதி

---

[1] புதிய சொற்களைத் தோற்றுவிக்கும் வகையில் உம்மைக் கிளவியின் பணி மகத்தானதாகும். மொழியிடையில் நிகழும் மெல்லொலிகள் அனைத்தையும் உம்மைக்கிளவியின் சிதைவாகத் துணியலாம். வினைப் பகுதிகளையடுத்தும், பெயர்ப் பகுதிகளை யடுத்தும், குறிப்புப் பெயரெச்சப் பகுதிகளையடுத்தும் உம்மைக் கிளவி நிகழ்கின்றது. வினைப்பகுதிகளை யடுத்து உம்மைக்கிளவி நிகழ்வதைச் செய்யும் வாய்பாட்டு வினைகளிலும், குறிப்புப் பெய ரெச்சப் பகுதிகளை யடுத்து நிகழ்வதை அரும் (அர்-உம்) பெரும் (பெர்–உம்), கரும் (கர்-உம்) போன்ற சொற்களிலும் காணலாம். பேச்சுத் தமிழில் பெயர்கள் பன்மைப் பொருண்மை உணர்த்தும் போது பகுதிகளை யடுத்து உம்மைக்கிளவி நிகழும் போக்கு இக் கட்டுரையின் இறுதிப் பகுதியில் குறிக்கப்பெறுகிறது. இவை யன்றி நன்கு, முன்பு, அங்ஙு போன்ற வினையடை (Adverbs) களிலும் ையீற்றுப் பெயர்களிலும் உம்மைக்கிளவியின் நிகழ்ச் சியை வரலாற்று நிலையில் ஆராயலாம்.

களை [1] ஏற்று நிகழும்போது அமையும் சொற்களை இரண்டாம் பிரிவினவாகக் கொள்ளலாம். எ-டு. வாழை (வாழ்-ஐ), மலர் (மல்-அர்), புயல் (புய் அல்), புரள் (புர்-அள்), கலுழ் (கல்-உழ்), வெயில் (வெய்-இல்), கொலை (கொல்-ஐ), களி (கள்-இ), குழாய் (குழ் ஆய்) இச்சொற்களேயன்றி ஒன்றுக்கு மேற்பட்ட உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்று நடைபெறும் சொற்களும் இரண்டாம் பிரிவில் அடங்கும். எ-டு மழலை (மழ்-அல்-ஐ), தெரியல் (தெர்-இய்-அல்), உருளை (உர்-உள்-ஐ), அலரி (அல்-அர்-இ) கருமை, (கர்-உம்-ஐ). நலம் (நல்-அய் உம்).

உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஈற்றில்கொண்ட சொற்கள் அனைத்தும் மூன்றாம் பிரிவில் அடங்கும். இச் சொற்களைப் புகர ஈற்றுச் சொற்களெனவும், துகர ஈற்றுச் சொற்களெனவும், குகர ஈற்றுச் சொற்களெனவும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். வகரம் பகரத்தின் திரிபாதலால் தாவு, நீவு, அளவு போன்ற சொற்கள் புகர ஈற்றனவாகவே கருதப்பெறும். இதேபோல் ஈற்றில் நிகழும் உகரம் ஊர்ந்த சகரம், டகரம், றகரம், ஆகியவை தகரத்தின் திரிபாதலால் மஞ்சு, மாசு, நச்சு, வண்டு, வடு, வட்டு, ஒன்று, வெறு, பற்று ஆகிய சொற்கள் துகர ஈற்றனவாகக் கொள்ளப்பெறும்.

உகரம் ஊர்ந்த வல்லீற்றனவாகிய மூன்றாம் பிரிவுச் சொற்கள், இரண்டாம் பிரிவுச் சொற்களைப் போலவே உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்கும் பான்மையினவாகும். எ-டு சாம்பல் (சாம்பு-அல்), கொம்பர் (கொம்பு-அர்), கவிழ் (கவு-இழ்), சுவை (சுவு-ஐ),

---

[1] உயிர் முதலாகிய விகுதிகள் பின்வருமாறு:- அய், அர், அல், அள், அழ்; ஆய், ஆர், ஆல் ஆள், ஆழ் (?); இய், இர், இல், இள், இழ்; ஈய், ஈர், ஈல் (?) ஈள் (?), ஈழ் (?); உய், உர் (?), உல், உள், உழ் (?), ஊய் ஊர் (?), ஊல் (?), ஊள் (?), ஊழ். இவற்றுள்யகர ஈற்றனவாகிய விகுதிகளில் யகரம் வீழ்ந்துபட்டது. அய் என்னும் விகுதி யகரம் வீழ்ந்துபடாத நிலையில் ஐ எனத் திரிந்து நின்றது. அம், ஆம் ஆகியவற்றை *அய்-உம் (-அய்ம்-அம்) *ஆய்-உம் (-ஆய்ம்-ஆம்) என ஆராயலாம். ஆகவே அவற்றைஓரசையின எனக்கொள்வதற்கில்லை.

பாத்தி (பாத்து-ஐ), பன்றி (பன்று-இ), மங்கை (மங்கு-ஐ), பகை (பகு-ஐ). இவ்வாறு உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்கும் உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்கள் மேலும் உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஏற்று நடைபெறுதலும் உண்டு. எ-டு. அடக்கு (அடு-அ (-அய்) -கு), இறங்கு (இறு-அ (-அய்) -உம்-கு), படிப்பு (படு-இ (-இய்) -பு), குறிப்பு (குறு-இ (-இய்) -பு). இங்ஙனம் இரண்டாம் முறையும் உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஏற்று நிகழும் சொற்கள் மீண்டும் உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்று நிகழ்வதும் உண்டு. எ-டு. பறவை (பறு-அ (-அய்) -உம்-பு-ஐ) மறதி (மறு-அ (-அய்) -உம்-து-இ (-இய்)), படப்பை (படு-அ (-அய்) -பு-ஐ), அறிஞர் (அறு-இ (-இய்) -உம்-து-அர்.)

உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்களின் பொது அமைப்பைப் பின் வருமாறு குறிக்கலாம்.

$$\text{பகுதி} + (\text{உம்}+)\begin{cases}\text{பு}\\ \text{து}\\ \text{கு}\end{cases}(+\text{ உயிர் முதலாகிய விகுதி})$$

இவ் அமைப்பு திராவிட மொழிகள் அனைத்துக்கும் பொதுவாக அமையுமாதலால் இதனை மூலமொழியிலேயே பயின்று வழங்கியதாகக் கொள்ளலாம். இவ் அமைப்பின்கண் நிகழும் பகுதிகளின் அமைப்பு பல்வேறு வகையினவாகும். அவை பின்னர் ஆராயப் பெறும். மேற்குறித்த அமைப்பினவாகிய சொற்கள் நிகழ்நிலை (Synchronic Level) யிலும், வரலாற்று நிலையிலும் உற்ற மாறுதல்கள் பலவாகும். அவற்றுள் சில அடிப்படை மாறுதல்களை இங்கு ஆராயலாம்.

**நிகழ்நிலையில் நேர்ந்த மாறுதல்கள் :-** பகுதியின் முன் நிகழும் உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்கள் மிகுதல் நிகழ்நிலையில் நேர்ந்த ஒருகுறிக்கத்தக்க மாறுதலாகும். எ-டு. காம்-பு-காம்ப்பு,

வாய்-பு- வாய்ப்பு, ஈர்-கு-ஈர்க்கு, கால்-து- *கால்த்து[1]-காற்று, வள்-து-*வள்த்து[1]-வட்டு இடையொற்றுக்களை ஈற்றில் கொண்ட ஓரசைச் சொற்களை அடுத்து நிகழும் வல்லொற்றுக்கள் மிகுந்து நிற்கும் இப்போக்கு பின்னர் எல்லாப் பகுதிகளின் முன்னும் நிலைபெற்றுவிட்டது.

மூலமொழி வழங்கத் தொடங்கிய நிலையில் எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவாகவே நிகழ்ந்திருத்தல் வேண்டும். தொடக்க நிலையில் அமைந்த சொற்கள் ஓரசையினவாக மட்டுமன்றி, வகரம் நீங்கிய ஏனைய இடையொற்றுக்களை மட்டுமே ஈற்றில் கொண்டு இயங்கினவாதல் வேண்டும். இந்நிலையில் நுண்ணிய கருத்துக்களைப் புலப்படுத்த இடையொற்று ஈற்றனவாகிய இவ் ஓரசைச் சொற்களையே பகுதிச் சொற்களுடன் பொருத்திப் புதிய சொற்கள் படைக்கப் பெற்றனவாகக் கருத

---

[1] லகர, ளகரங்களின் முன் வல்லொற்றுக்கள் மிகுந்து நிற்கும் நிலையை வரலாற்றுச் சான்றுகளும், ஒப்பியல் சான்றுகளும் தெளிவுபடுத்துகின்றன. தமிழ்க் கல்வெட்டுகளில் கோயில்க் கணக்கு, கோயில்த்தெரு, கோயில்ப்பூசை, உள்க்கடை, உள்ப்பட்ட, ஆள்த்தேவை போன்ற தொடர்கள் காணப் பெறுகின்றன. (The Language of Tamil Inscriptions. (1350 to 1700 A. D.) Pages 89 & 96. S V. Shanmugam. unpublished Ph. D. dissertation submitted to Annamalai University). இவ்வாறே மேல்ப்படி, சொல்க்குற்றம், நாள்த் திருவமுது போன்ற சொற்களும் தமிழ்க் கல்வெட்டுக்களில் வழங்குவதாக டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தம்முடைய சாசனும்-தமிழும் என்னும் நூலில் குறிப்பிடுகிறார். மலையாளத்தில் பற்பொடி, கற்றூண், நெற்கதிர், வாட்போர், ஆட்கூட்டம் போன்ற தொடர்கள் முறையே பல்ப்பொடி, கல்த்தூண், நெல்க்கதிர், வாள்ப்போர், ஆள்க்கூட்டம் என வழங்குகின்றன. இவ் உண்மைகளைக் கருத்தில் கொண்டே மேல் எடுத்துக்காட்டுக்களில் லகர, ளகரங்களின் முன் வல்லொற்றுக்கள் இரட்டித்தனவாகக் கொள்ளப்பெற்றிருக்கிறது.

லாம்.[1] தொடக்க நிலையில் அமைந்த ஓரசைச் சொற்கள் இடையொற்றுக்களை ஈற்றனவாகக் கொண்டனவாதலால், பின்னர் தோன்றியமைந்த உயிர் ஈற்றுச் சொற்கள் அனைத்தும் இடையீற்று ஓரசைச் சொற்களின் மீது அமைக்கப்பெற்றனவாகத் துணியலாம். இதனைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது, உயிர் ஈற்றுச் சொற்கள் அனைத்தும் ய, ர, ல, ள, ழ, ஆகிய ஐந்தனுள் ஏதேனும் ஒன்றினை ஈற்றில் கொண்டனவாதல் வேண்டும். இவ்ஐந்து இடையொற்றுக்களுள் யகரம் ஒன்றே ஈற்றில் நிகழுங்கால், வீழ்ந்துபடும் தன்மையினதாகக் காணப்படுகின்றது-[2] இதை அடிப்படையாகக் கொண்டு உயீரீற்றுச் சொற்கள் அனைத்தும் தொடக்கத்தில் யகர ஈற்றனவாக வழங்கி, பின்னர் அதனை இழந்திருத்தல் கூடும் என்று கருதலாம்- வரலாற்றுச் சான்றுகளும், ஒப்பியல்சான்றுகளும் இதனை வலியுறுத்தும்வகையில் அமைந்திருக்கின்றன. உரி, குழி, வாசி ஆகிய சொற்கள் கல்வெட்டுக்களில் உரிய், குழிய், வாசிய், என யகர ஈற்றனவாக வழங்குகின்றன.[3] கோத்தம், தொதுவம் ஆகிய மொழிகளில் மெய்யொலிகளை அடுத்து ஈற்றுஒலியாக யகரம் நிகழும் சொற்கள் பல காணப்படுகின்றன. இவற்றுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் உயிர் ஈற்றனவாக அமைத்தியல்கின்றன. பின்வரும் எடுத்துக் காட்டுக்களும் அவற்றினடியாக அமைக்கப்பெற்ற தொன்மை வடிவங்களும் தொடக்கத்தில் யகரம் மொழியீற்றில் வழங்கிய செய்தியைப் புலப்படுத்தும்.

---

[1] பகுதிகளின் மீது பொருந்தி நடத்த இவ் ஓரசைச் சொற்களே பின்னர் விகுதிகளாகக் குறிக்கப்பெற்றன. விகுதிகள் எனப்பெறும் இவ் ஓரசைச் சொற்கள் தொடக்கத்தில் பகுதிகளை அடுத்துத்தொடரன் கண்ணோட்டத்தில்(Syntactic point of view) நிகழ்ந்தனவா அன்றிச் சொல்லியல் கண்ணோட்டத்தில் ( Morphological point of view ) நிகழ்ந்தனவா என்பது குறித்துத் திட்ட வட்டமாக ஏதும் சொல்ல முடியவில்லை.

[2] அவள், மரக்கால், தண்ணீர் ஆகிய சொற்கள் பேச்சு வழக்கில் ஈற்றில் நிகழும் இடையொற்றுக்களை இழந்து நிற்பன போல் தோன்றும். இச்சொற்களுக்கு நிகராகப் பேச்சு வழக்கில் காணப்படும் சொற்களின் முறையான வளர்ச்சியையும்.அமைப்பையும் ஆராயாமல் ளகர,லகர,ரகர இடையொற்றுக்கள் கெட்டுகின்றன என மேல்போக்காகக் கூற முற்படுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும் லகர, ளகர, ரகரங்களை ஈற்றில் கொண்ட பெருவாரியான சொற்களில் இவ் வீழ்ச்சி நடைபெறவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

[3] The Language of Tamil Inscriptions. (1350 to 1700 A. D.) Page 104. S. V. Shanmugam. (An unpublished Ph. D. dissertation submitted to Annamalai University.

| வரிசை எண். | DED வைப்பெண் | தமிழ் | கோத்தம் | தொதுவம் | தொன்மை வடிவம் |
|---|---|---|---|---|---|
| 1 | 3219 | வண்டி | வண்ட்ய் | பொட்ய் (pody) | *வண்டிய் / *பண்டிய் |
| 2 | 1379 | குடி | குட்ய் (gudy) | — | *குடிய் |
| 3 | 3297 | பழி | பள்ய் | — | *பழிய் |
| 4 | 3435 | பிரி | பிர்ய் | — | *பிரிய் |
| 5 | 3412 | பிடி | பிட்ய் (pidy) | — | *பிடிய் |
| 6 | 3546 | புளி | புள்ய் | — | *புளிய் |
| 7 | 3898/3901 | மறி | மய்ர் (—மர்ய்) | மற்ய் | *மறிய் |
| 8 | 855 | ஒளி | ஒள்ய் | — | *ஒளிய் |
| 9 | 1059 | கரடி | கர்ட்ய் | — | *கரடிய் |
| 10 | 1012 | கத்தி | கத்ய் | கொத்ய் | *கத்திய் |
| 11 | 1669 | சேரி | கோர்ய் | கோர்ய் | *கேரிய் |
| 12 | 1318 | கிளி | கிள்ய் | — | *கிளிய் |
| 13 | 1704/1705 | கொடி | கொட்ய் (kody) | — | *கொடிய் |
| 14 | 2473 | தணி | தய்ண் (–தண்ய்) | — | *தணிய் |
| 15 | 2459 | தடி | தட்ய் (–தட்ய் tady) | தொட்ய் (tody) | *தடிய் |
| 16 | 2825/2827 | தெளி | தெய்ள் (—தெள்ய்) | — | *தெளிய் |
| 17 | 2815 | தெரி | தெய்ர் (—தெர்ய்) | — | *தெரிய் |
| 18 | 2709 | துணி | துண்ய் | — | *துணிய் |
| 19 | 3322 | பனி | பன்ய் | பொன்ய் | *பனிய் |
| 20 | 3823 | மணி | மய்ண் (—மண்ய்) | மொண்ய் | *மணிய் |
| 21 | 2981 | நரி | நய்ர் (—நர்ய்) | நர்ய் | *நரிய் |
| 22 | 1145 | கழி | கய்ள் (—கள்ய்) | — | *கழிய் |

மேல் எடுத்துக்காட்டுகள் அனைத்தும் தொடக்கத்தில்யகரம் ஈற்றில் வழங்கிய நிலையைஉணர்த்துவனவாகக்கருதலாம். இவற்றுள் தமிழில் நிகழும் சொற்கள் இகர ஈற்றனவாகக் காணப்படுகின்றன. தமிழில் வழங்கும் அகர ஈற்றுச் சொற்களாகிய நட. பிற, பற, அள, போன்றவையும் தொடக்கத்தில் * நடய், * பிறய், * பறய், * அளய், என யகர ஈற்றனவாக வழங்கி, பின்னர் அதனை இழந்தனவாகத் துணியலாம். *-அய் என்னும் விகுதி ஐ என வழங்கத் தொடங்கிய நிலையில் யகர ஈற்றனவாகிய இச்சொற்கள் நடை, பிறை, பறை, அளை என அமைந்தனவாதல் வேண்டும்.

அகர இகரங்களையடுத்து ஈற்றில் நிகழ்ந்த யகரம், உகரத்தை யடுத்தும் ஈற்றில் நிகழ்ந்ததாகக் கருதலாம் போதிய சான்றுகள் கிடைக்கவில்லையாயினும் சுற்றுப்புறச் சான்றுகளைக் கொண்டு எழு, அழு, கரு போன்ற சொற்களை *எழுய், *அழுய், *கருய் எனவும், உகரம் ஊர்ந்த வல்லீறுகளாகிய பு, து, கு ஆகிய விகுதிகளை முறையே *புய், *துய், *குய் எனவும் உருவமைக்கலாம் என்று தோன்றுகின்றது. உயிர் முதலாகிய விகுதிகளை அடுத்தும், உகரம் ஊர்ந்த வல்லொற்று விகுதிகளை அடுத்தும் ஈற்றில் நிகழ்ந்த யகரம் மூலமொழியிலேயே வீழ்ந்து பட்டதாகக் கருதலாம்.

இடையொற்றுக்களின் பின் நிகழும் வல்லொற்றுக்கள் மிகுந்து நிற்றல் மூலமொழியில் நிலைபெற்றுவிட்ட ஒரு புணர்ச்சி விதியாதலால் பின்னர்ப் புதிதாகத்தோன்றியமைந்த உயிரீற்றுப் பகுதிகளை அடுத்து நிகழும்போதும் வல்லொற்றுக்கள் மிகுந்து நிற்கத் தலைப்பட்டனவாதல் வேண்டும். மொழியீற்றில் நிகழ்ந்த யகரம் வீழ்ந்துபட்ட நிலையிலும் வல்லொற்றுக்கள் மிகுந்து நிற்கும் இப்போக்கு காலப்போக்கில் ஒரு மரபாக அமைந்து விட்டதாகக் கருதலாம்.

## வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்த மாறுதல்கள் :

1. பகுதியை அடுத்து நிகழ்ந்த உம்மைக்கிளவியின் உகரம் கெட்டு நிற்றல்: வண்ணனை இலக்கணப் புலவர்கள் குறிக்கும் மென்றொடர்க் குற்றுகரச் சொற்கள் அனைத்திலும் இந்நிலையைக் காணலாம்.

*நல்-உம்-து—*நல்ந்து—நன்று
*குல்-உம்-து—*குல்ந்து—குன்று
*கல்-உம்-து—*கல்ந்து—கன்று
*வள்-உம்-து—*வள்ந்து—வண்டு
*உள்-உம்-து—*உள்ந்து—உண்டு
*குள்-உம்-து—*குன்ந்து—குண்டு 'குளம் / குட்டை'

2. யகர ஈற்றுப் பகுதியை அடுத்து உம்மைக்கிளவியின் சிதைவாகிய மகரமும், வல்லொற்றும் இணைந்தோ அல்லது வல்லொற்று மட்டும் மிகுந்தோ நிகழும்போது பகுதியில் அமைந்த யகர ஈறு கெட்டு நிற்றல்: [1]

(அ) *சாய்-உம்-பு—*சாய்ம்பு—சாம்பு
*பாய்-உம்-பு—*பாய்ம்பு—பாம்பு
*அய்[2]-உம்-பு—*அய்ம்பு—அம்பு

---

1 யகர ஈற்றுப் பகுதியை அடுத்து உம்மைக்கிளவி மட்டும் நிகழும் போது உம்மைக்கிளவியின் உகரம் கெடுவதுடன், பகுதியில் நிகழும் யகர ஈறும் கெட்டு நிற்கும் நிலையையும் தமிழில் காணலாம். எ-டு. *போய்-உம்—*போய்ம்—போம், *ஆய்-உம்—*ஆய்ம்—ஆம், *வேய்-உம்—*வேய்ம்—வேம் *சாய்-உம்—*சாய்ம்—சாம், *தீய்-உம்—*தீய்ம்—தீம். மொழியியல் அறிஞர்கள் போகும், ஆகும், வேகும், சாமம் என்ற சொற்களே முறையே போம், ஆம், வேம், சாம் எனக் குறித்துச் செல்கின்றனர். இவர்தம் ஆய்வு முறையை ஏற்பதற்கில்லை.

2 அயில் என்னும் சொல் பத்துப்பாட்டு என்னும் சங்க இலக்கியத்தில் கூர்மை, அம்பு ஆகிய பொருண்மைகளை உணர்த்தி நிற்கின்றது.

அயில் காய்ந்தன்ன கூர்ங்கற் பாறை (பத்துப்பாட்டு 10–373)
அயில் உருப்பனைய ........ (ஷை 3–7)
அறைவாய்க் குறுந்துணி அயில் உளி பொந்த (ஷை 3–52)
அயில் நுனை மருப்பின் ............(ஷை 5–31)
அம்புமிழ் அயில் அருப்பம் (ஷை 6–67)

இவற்றைக் கருத்தில் கொண்டே *அய் என்னும் பகுதி மேலே அமைக்கப்பெற்றுள்ளது.

*நய்-உம்-பு—*நய்ம்பு—நம்பு
*வெய்-உம்-பு—*வெய்ம்பு—வெம்பு

(ஆ) *அய்-உம்-கு—*அய்ங்கு—அங்கு
*பய்-உம்-கு—*பய்ங்கு—பங்கு
*மய்-உம்-கு—*மய்ங்கு—மங்கு
*தூய்-உம்-கு—*தூய்ங்கு—தூங்கு
*நீய்-உம்-கு—*நீய்ங்கு—நீங்கு
*தீய்-உம்-கு—*தீய்ங்கு—தீங்கு

(இ) *விய்-உம்-து—*விய்ந்து—விந்து
*எய்-உம்-து—*எய்ந்து—எந்து
*பய்-உம்-து—*பய்ந்து—பந்து
*சிய்-உம்-து—*சிய்ந்து—சிந்து

(ஈ) *சிய்-பு—*—சிய்ப்பு—சிப்பு
*காய்-பு—*—காய்ப்பு—காப்பு 'வளையல்/காவல்'
*மய்பு-பு—*மய்ப்பு—மப்பு
*துய்-பு—*துய்ப்பு—துப்பு

(உ) *மூய்-கு—*மூய்க்கு—மூக்கு
*நாய்-கு—*நாய்க்கு—நாக்கு
*தூய்-கு—*தூய்க்கு—தூக்கு
*போய்-கு—*போய்க்கு—போக்கு
*நீய்-கு—*நீய்க்கு—நீக்கு
*ஆய்-கு—*ஆய்க்கு—ஆக்கு

(ஊ) *பய்-து—*பய்த்து—பத்து
*கூய்-து—*கூய்த்து—கூத்து
*முய்-து—*முய்த்து—முத்து
*விய்-து—*விய்த்து—வித்து
*நய்—து—*நய்த்து—நத்து

உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்றும், ஏற்காமலும் நடை

பெறும் உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஈற்றில்கொண்ட ஏனைய திராவிட மொழிச் சொற்களுக்கும் இவ் ஆய்வு முறை பொருந்தும்.

3. யகர ஈற்றுப் பகுதிகளை அடுத்து இரட்டித்து நிற்கும் தகர ஒற்றும், மகரத்தின் திரிபாகிய நகரத்தைத் தொடர்ந்து நிகழும் தகர ஒற்றும் சகரமாகத் திரிந்து நிற்றல்: இத்திரிபில் மகரத்தின் திரிபாகிய நகரமும் ஞகரமாகத் திரிந்தமைகின்றது. இவ்வாறு பல்லின மெய் (Dental consonants) களை அண்ணமெய் (Palatal consonants) களாகத் திரியச் செய்த பகுதியின் ஈறாகிய யகரம் இறுதியில் கெட்டு நிற்கின்றது.[1]

(அ) *மூய்-து—*மூய்த்து—*மூய்ச்சு—மூச்சு
*நய்-து—*நய்த்து—*நய்ச்சு—நச்சு
*பீய்-து—*பீய்த்து—*பீய்ச்சு—பீச்சு
*ஆய்-து—*ஆய்த்து—*ஆய்ச்சு—ஆச்சு 'ஆயிற்று'
*போய்-து—*போய்த்து—*போய்ச்சு—போச்சு 'போயிற்று'

(ஆ) *அய்-உம்-து—*அய்ந்து—*அய்ஞ்சு—அஞ்சு
*மிய்-உம்-து—*மிய்ந்து—*மிய்ஞ்சு—மிஞ்சு
*துய்-உம்-து—*துய்ந்து—*துய்ஞ்சு—துஞ்சு
*நய்-உம்-து—*நய்ந்து—*நய்ஞ்சு—நஞ்சு
*நெய்-உம்-து—நெய்ந்து—*நெய்ஞ்சு—நெஞ்சு
*மய்-உம்-து—*மய்ந்து—*மய்ஞ்சு—மஞ்சு

4. திராவிட மொழிகளில் வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க மாறுதல்களில் வல்லொற்றுக்களின் முன் நிகழ்ந்த மெல்லொற்றுக்களின் வீழ்ச்சியும் ஒன்றாகும். மிகாமல்

---

1. இக்கேடு நிகழாத சொற்களும் தமிழில்உண்டு. எ-டு. *காய்-து—*காய்த்து—காய்ச்சு, *பாய்-து—*பாய்த்து—பாய்ச்சு. அண்ணமெய் (Palatal consonants) களின் முன் யகரம் வீழ்ந்து படாத இத்தகைய சொற்கள் எண்ணிக்கையில் மிகச் சிலவே.

உயிர்களிடையே தனித்து நிகழும் வல்லொற்றுக்களையுடைய எல்லாத் திராவிட மொழிச் சொற்களும் தொடக்கத்தில் வல்லொற்றுக்களின் முன் உம்மைக்கிளவியின் கூறாக நிற்கும் மகரத்தின் திரிபாகிய ஏனைய மெல்லொற்றுக்கள் நிகழ வழங்கியனவாகத் துணியலாம். ஒப்பியல் சான்றுகளும், நிகழ்நிலைச் சான்று (Synchronic Evidences) களும் இப்பேருண்மையை நன்கு வலியுறுத்தி நிற்கின்றன.

தமிழ் (த). எலும்பு, கன்னடம் (கன்). எலுபு (Ded 714)
த. பாம்பு, கோத்தம். பாப் (ba·b) (Ded 3361)
த. நரம்பு, தோதுவம். நர்ப் (narb), பர்ஜி. நெருப்
(nerub) (Ded 2․64)
த. அலம்பு, கன், அலபு (alabu) Ded 208)
த. எறும்பு, கோத்தம். இர்ப் (irb) (Ded 734)
த. வரம்பு, துளு பரபு (barabu) (Ded 4301)
த. ஐந்து (—*அய்ந்து), தெலுங்கு, கன்னடம். அய்து
த. மருந்து, கன். மர்து (mardu) (Ded 3863)
மலையாளம். பந்து–'பத்து' (பந்திரண்டு '12'), த –பது '10'
(இரு–பது........)

தெலுங்கு. அந்து, த. அது
த. இரண்டு, கன். எரடு,
தெலுங்கு. நாண்டு (Deds 3012), த. நாடு.
த. மூன்று, கன். மூறு
த. கன்று, கன். கறு (Ded 1187)
த. குன்று, கன். குறு (Ded 1548)
தெலுங்கு. வேங்கு, த. வேகு
கன். படங்கு, படகு. த. படகு.
த. அலங்கு, கன். அலகு (alagu) (Ded 203)
த. அடங்கு, கன். அடங்கு, அடகு (aḍagu) (Ded 56உ)
த. நடுங்கு, கன் நடுகு (nadugu) (Ded 2960)
கன் கரங்கு/கரகு (karagu) (Ded 1086) 'கரைதல்'
கன். மலங்கு/மலகு (malagu) (Ded 3875)

கன். மடங்கு/மடகு (madagu) (Ded 3795)
கன். முழுங்கு/முழுகு (mulugu) (Ded 4096) 'முழுகுதல்'
கன் தொடங்கு (todanku) / தொடகு (todaku) (Ded 2866)
கன் இடங்கு (idanku) / இடகு (idaku) (Ded 378)
கன். இறங்கு (iranku) / இறகு (iraku) (Ded 447)
கன. உருண்டு (uruntu) / உருடு (urutu) (Ded 571)
கன். திரும்பு (tirumpu) / திருபு (tirupu) (Ded 2655)
கன். முருண்டு (muruntu) / முருடு (murutu) (Ded 4075)
கன். முழுங்கு (mulunku) / முழுகு (muluku) (Ded 4096)

கன்னடத்தில் அமைந்த பல செய்து வாய்பாட்டு வினைகளில் துகரக்கிளவியின் முன் நிகழ்ந்த மெல்லொலிகள் வீழ்ந்து பட்ட நிலையை, அவற்றுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் செய்து வாய்பாட்டு வினைகள் புலப்படுத்தி நிற்கின்றன.

த. அரிந்து, கன். அரிது (HGOK பக்கம் 168)
த. அழிந்து, கன் அழிது (ஷை 169)
த. அளந்து, கன். அளது (ஷை 170)
த. ஆண்டு, கன். ஆள்து (ஷை 173)
த. எறிந்து, கன். எறிது (ஷை 178)
த. துறந்து, கன். தொறது (ஷை 195)
த. நடந்து, கன். நடது (ஷை 198)
த. விழுந்து, கன். பிழ்து (bildu) (ஷை 211)
த. மடிந்து, கன். மடிது (ஷை 213)
த. முனிந்து, கன். முனிது (ஷை 217)
த போந்த, (போந்து-அ), கன். போத (போது-அ)
(ஷை 209)

தெலுங்கில் பல சொற்களில் வல்லொலிமுன் நிகழும் மெல்லொலி கெட்டும் கெடாமலும் அமையும் போக்குக் காணப் படுகிறது.

நேண்டு / நேடு 'இன்று'

நாண்டு / நாடு 'அன்று'
வாண்டு / வாடு 'அவன்'
ஏண்டு / ஏடு 'ஆண்டு', 'ஏழு' [1]
மாண்ட (ma:nta) / மாட (ma:ta) 'பேச்சு'
கூந்துரு (ku:nturu) / கூதுரு (ku:turu) 'மகள்'
ராந்த (ra:nta) / ராத (ra:ta) 'எழுத்து'
மூந்தி (mu:nti) / மூதி (mu:ti) 'முகம்'

வல்லொலிகளின் முன் நிகழ்ந்த இத்தகைய மெல்லொலி வீழ்ச்சியைக் கருத்தில்கொண்டு, இரட்டிக்காமல உயிர்களிடையே தனித்து நிகழும் வல்லொற்றுக்களின் முன் இன மெல்லொற்றுக்களைப் பெய்து பல திராவிடமொழிச் சொற்களின் தொன்மை வடிவங்களை உருவமைக்கலாம். தமிழில் உயிர்களிடையில் தனித்து நிற்கும் வல்லொலிகளையுடைய சொற்களின் தொன்மைப் படிவங்களையும், அவற்றின் அமைப்பையும் பின்வருமாறு ஆராயலாம்.

ஆறு—*ஆன்று (—*ஆல்ந்து—*ஆல்-உம்-து)
நூறு—*நூன்று (—*நூல்ந்து—*நூல்-உம்-து)
பாடு—*பாண்டு (—*பாள்ந்து—*பாள்-உம்-து)
கோடு—*கோண்டு (—*கோள்ந்து—*கோள்-உம்-து)
மாசு—*மாஞ்சு (—*மாய்ஞ்சு—*மாய்ந்து—*மாய்-உம்-து)
வீசு—*வீஞ்சு (—*வீய்ஞ்சு—*வீய்ந்து—*வீய்-உம்-து)
திரிபு—*திரிம்பு (—*திரிய்ம்பு—*திரிய்-உம்-பு)
அளபு—*அளம்பு (—*அளய்ம்பு—*அளய்-உம்-பு)
பெறு—*பென்று (—*பெல்ந்து—*பெல்-உம்-து)
பொறு—*பொன்று (—*பொல்ந்து—*பொல்-உம்-து)
வெறு—*வென்று (—*வெல்ந்து—*வெல்-உம்-து)
கொடு—*கொண்டு (—*கொள்ந்து—*கொள்-உம்-து)
படு—*பண்டு (—*பள்ந்து—*பள்-உம்-து)
நடு—*நண்டு (—*நள்ந்து—*நள்-உம்-து)
பகு—*பங்கு (—*பய்ங்கு—*பய்-உம்-கு)
வகு—*வங்கு (—*வய்ங்கு—*வய்-உம்-கு)

தொகு—*தொங்கு (—*தொய்ங்கு—*தொ-உம்-கு)
நகு—*நங்கு (—*நய்ங்கு—*நய்-உம்-கு)
வேகு—*வேங்கு (வேய்ங்கு—*வேய்-உம்-கு)

இவ் ஆய்வு முறை உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்ற உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்கள் அனைத்துக்கும் பொருந்தும். எடுத்துக் காட்டாக குடை (குடு-ஐ), வடை (வடு-ஐ), படி (படு-இ), மடி (மடு-இ), விதை (விது-ஐ), சிதை (சிது-ஐ), உதை (உது ஐ), நகை (நகு-ஐ), பகை (பகு-ஐ), மகிழ் (மகு-இழ்), பகல் (பகு-அல்) போன்று வழங்கும் சொற்களின் அமைப்பை ஆராய்வதற்குமுன், அவற்றில் நிகழும் உயிர் முதலாகிய விகுதிகளைத் தனியாகப் பிரித்து எடுத்துக்கொண்டால் எஞ்சி நிற்பவை உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஈற்றில் உடைய சொற்களாக அமையும். இவ்வாறு அமையும் சொற்களை மேற்கண்ட முறையில் ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றின் அமைப்பை ஆராயலாம். படகு, முதுகு, முகடு, உதடு, சிதறு, அறிவு, பறவை போன்ற சொற்களின் அமைப்பு சிக்கல் நிறைந்ததாகும். எனினும் அவற்றையும் பின்வருமாறு ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

1. படகு—*படங்கு—*படம்-கு. *படம்- —*படு-அய்-உம்
*படு—*பண்டு—*பள்ந்து—*பள்-உம்-து

2. முதுகு—*முதுங்கு—*முதும்-கு.
*முதும்—*முந்தும்—*முய்-உம்-து-உம்

3. முகடு—*முகண்டு—*முகள்ம்-து.
*முகள்ம்—*முகள்-உம் *முகள்- —*முகு-அள்,
*முகு- —*முங்கு—*முய்-உம்-கு.

4. உதடு—*உதண்டு—*உதள்ம்—து.
*உதள்ம்—*உதள்-உம். உதள்—*உது-அள்.
*உது- —*உந்து- —*உய்-உம்-து.

5. சிதறு—*சிதன்று—*சிதல்ம்-து. *சிதல்ம்—*சிதல்-உம்
*சிதல்- —*சிது-அல்-.
*சிது- —*சிந்து- —*சிய்-உம்-து-

6. அறிவு—*அறிபு—*அறிம்பு—*அறிம்-பு.
*அறிம்- —*அறிய்-உம். *அறிய்- —*அறு-இய்-.
*அறு- —*அன்று- —*அல்-உம்-து.

7. *பறவை—*பறவு-ஐ. *பறவு- —*பறபு- —* பறம்பு-
—*பறய்ம்-பு. *பறய்ம்- —*பறய்-உம்.
*பறய்- —*பறு-அய். *பறு- —*பன்று- —*பல்-
உம்-து.

**5. மெல்லொலிகளின் முன் வல்லொலிகளின் ஒலித்தன்மை:** திராவிட மொழிகளின் மூல மொழியில் அமைந்த வல்லொலிகள் அனைத்தும் நிலையொலித்தன்மை (Voiceless character) யின வாகும். உம்மைக்கிளவியை அடுத்து நிகழ்ந்த இவ்வல்லொலிகள் மூலமொழியின் தொடக்கநிலையில் நிலையொலியன் (Voiceless Phonemes) களாகவே ஒலிக்கப்பெற்றனவாகத் துணியலாம். பின்னர் மூலமொழியில் கிளைமொழிகள் (Dialects) பெருகிய நிலையில் நிலையொலித்தன்மையவாய வல்லொலிகள் சில கிளைமொழிகளில் அலையொலி (Voiced Sounds) களாகவும், ஏனையவற்றுள் அலையொலிகளாகத் திரிந்தும், திரியாமலும் ஒலிக்கப்பெற்றன வாதல் வேண்டும். மூலமொழியில் உம்மைக்கிளவியின் முன் நிகழ்ந்த நிலையொலித்தன்மையவாய வல்லொலிகளை ஓசைநிலை (Phonetic Level) அலையொலித் தன்மையினவாக ஆக்கிக் கொண்ட கிளைமொழிகள் தமிழ், மலையாளமாகவும், அவ் ஒலிகளை நிலையொலித் தன்மையினவாக மட்டுமின்றி அலையொலித் தன்மையினவாகவும் ஒலிக்கத் தொடங்கிய கிளை மொழிகள் தெலுங்கு, கன்னடம், துளு போன்ற மொழிகளாகவும் தோன்றியமைந்தனவாகக் கருதலாம்.[1]

---

[1] திராவிட மொழிகளில் மெல்லொலிகளை அடுத்து நிகழும் வல்லொலிகள் நிலையொலித்தன்மையினவாக அமையும் போக்கினைத் திரு. குமாரசாமி ராசா அவர்கள் Post Nasal Voiceless Plosives in Diravidian (அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு) என்னும் நூலில் ஆராய்கிறார். மூலமொழியில் மெல்லொலிகளை அடுத்து வல்லொலிகள் இரட்டித்து நின்றன எனவும், மூலமொழியினின்றும் பின்னர்க் கிளைத்

வல்லொலிகள் மெல்லொலிகளின் முன் நிலையொலியின வாகவும், அலையொலியினவாகவும் ஒலிப்பதைப் பின்வரும் தெலுங்கு எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

**காங்க** (ka:nka) **'வெப்பம்', காங்கு** (ka:ngu) **'காய்தல்'**
பண்ட (panta) 'விளைச்சல்', பண்டு (pandu) 'பழம், விளைதல்'
**வண்ட** (vanta) **'சமையல்', வண்டு** (vandu) **'சமைத்தல'**
**மண்ட** (manta) **'எரிச்சல்', மண்டு** (mandu) **'எரிதல்'**
**தோண்ட** (to:nta) **'தோட்டம்', தோண்டு** (to:ndu)
**'தோண்டுதல்'**

---

தெழுந்த தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் மெல் லொலிகளை அடுத்து நிகழும் வல்லொலிகள் நிலையொலித் தன்மையினவாக அமைந்ததற்கு இவ் இரட்டிப்பே காரணம் எனவும் திரு. ராசா அவர்கள் கூறிச் செல்கிறார். எடுத்துக் காட்டாக, தெலுங்கில் தோண்ட (to:nta) 'தோட்டம்' என்ற சொல்லில் மெல்லொலியை அடுத்து நிகழும் வல்லொலி நிலை யொலித் தன்மையதாக ஒலிப்பதை விளக்கப் புகுந்த திரு. ராசா அவர்கள் தமிழில் வழங்கும் தோட்டம் என்ற சொல் லையும் அதனுடன் இணைத்து இரண்டுக்கும் பொதுவாக ★தோண்ட்டம் (★ to:nttam) என்ற மூலச் சொல்லை உருவ மைத்து, இம் மூலச் சொல்லினின்றும் தோண்ட (to:nta) தோட்டம் ஆகிய இரு சொற்களும் தோன்றின எனக் குறிப் பிடுகின்றார்; தமிழில் அமைந்த தோட்டம் என்ற சொல்லும் தெலுங்கில் வழங்கும் தோண்ட (to:nta) என்ற சொல்லும் ஒரே பொருண்மையினவாயினும், இரண்டும் தனித் தனி' அமைப்பினவாகும். தோட்டம்—★தோட்டு- —★தோள்–து-; தோண்ட (to:nta) — ★தோண்டு (to:ntu)–அ. ★–(to:ntu) —★தோள்–உம்–து-. (தோளா முத்தின் தெண்கடல் பொரு நன். (அகம் 137.13). தோளா—தோள்-ஆ- 'துளைக்காத') திரு. ராசா அவர்களின் ஆய்வுமுறை திராவிட மொழியிய லில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்பெறுகிறது ஆனால் அவ ருடைய முடிபுகள் தம்மை எந்த அளவுக்குத் தவறான திசை யில் திருப்பி விட்டிருக்கிறது என்பதை இன்னும் திராவிட மொழியியல் அறிஞர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

தமிழில் மெல்லொலிகளை அடுத்து ஓசை நிலையில் அலை யொலித்தன்மையினவாகவும், ஒலியின் நிலை (Phonemic Level) யில் நிலையொலித்தன்மையினவாகவும் வழங்கும் வல்லொலிகள் பிற திராவிட மொழிகளில் ஓசை நிலையிலும், ஒலியன் நிலையிலும் நிலையொலித்தன்மையினவாக ஒலிக்கப்பெறும் நிலையைப் பின் வரும் சில எடுத்துக் காட்டுக்களில் காணலாம்.

த. தண்டு, தெலுங்கு தண்டு (dantu).
த. குண்டு, தெலுங்கு குண்ட (gunta) ‘குளம்’
த. தோகை (—*தோங்கை), தெலுங்கு தோங்க (to:nka)
த. மிஞ்சு, தெலுங்கு மிஞ்சு (mincu)
த. உருண்டு, கன்னடம் உருண்டு (uruntu)
த. தொடங்கு, கன்னடம் தொடங்கு (tordanku)

இச்சொற்கள் அனைத்தும் பகுதி+உம்+உகரம் ஊர்ந்த வல்லொலி+(உயிர் முதலாகிய விகுதி) என்ற அமைப்பினவாகும்.

பகுதிகளின் அமைப்பு (Structure of the Bases): உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஈறாகக்கொண்டு, உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்றும் ஏற்காமலும் நிகழும் சொற்களின் பகுதிகளை மூன்று வகையினவாகப் பிரிக்கலாம். இடையொற்றுக்களை ஈற்றில் கொண்ட ஓரசைச் சொற்களும், அச்சொற்களின்மீது உயிர் முதலாகிய விகுதிகளை அமைத்து நடைபெறும் இரண்டாம் பிரிவுச் சொற்களும், உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்றும் ஏற்காமலும் நிகழும் உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்களும் மூன்றும் பிரிவுச் சொற்களின் பகுதிகளாக அமையற்பாலன.

1. ஓரசைச் சொற்கள் பகுதிகளாதல்.

வீழ்-து—வீழ்த்து
ஆழ்-து—ஆழ்த்து
*துய்-பு—*துய்ப்பு—துப்பு
*பல்-து—*பல்த்து—பற்று
*தேல்-து—*தேல்த்து—தேற்று

*பய்-து—*பய்த்து—பத்து
*கொய்-து—*கொய்த்து—கொத்து
*நீள்-து—*நீள்த்து—நீட்டு
*வேய்-உம்-து—*வேய்ந்து—வேந்து
*நோய்-உம்-பு—*நோய்ம்பு—நோம்பு
*அய்-உம்-கு—*அய்ங்கு—அங்கு
*போய்-கு—*போய்க்கு—போக்கு

2. இரண்டாம் பிரிவுச் சொற்கள் பகுதிகளாதல்.

*வரய் (—*வர்-அய்) -பு—*வரய்ப்பு—வரப்பு
*உயர் (—*உய்-அர்) -து—உயர்த்து
*கழல் (—*கழ்-அல்) -து—*கழல்த்து—கழற்று
*புரள் (—*புர்-அள்) -து—*புரள்த்து—புரட்டு
*களிய் (—*கள்-இய்) -பு—*களிய்ப்பு—களிப்பு
*சிலிர் (—*சில்-இர்) -பு—சிலிர்ப்பு
*பிலில் (—*பில்-இல்) -து—*பிலில்த்து—பிலிற்று
*குருய் (—*குர்-உய்) -து—*குருய்த்து—குருத்து
*உருள் (—*உர்-உள்) -து—*உருள்த்து—உருட்டு
*விளய் (—*விள்-அய்) -உம்-கு—*விளய்ங்கு—விளங்கு
*இளய் (—*இள்-அய்) -உம்-பு—*இளய்ம்பு—இளம்பு
*மருய் (—*மர்-உய்-) -உம்-து—*மருய்ந்து—மருந்து

3 அ) உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்காத உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்கள் பகுதியாதல்.

*பகு (—*பங்கு—*பய்-உம்-கு) -பு—பகுப்பு
*துடு (—*துண்டு—*துள்-உம்-து) -பு—துடுப்பு
*குறு (—*குன்று—*குல்-உம்-து) -கு—குறுக்கு
*பொறு (—*பொன்று—*பொல்-உம்-து) -கு—பொறுக்கு
*நிறு (—*நின்று—*நில்-உம்-து) -து—நிறுத்து
*உடு (—*உண்டு—*உள்-உம்-து) -து—உடுத்து

3. ஆ) உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்ற உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்கள் பகுதிகளாதல்.

★மடிய் (—★மடு-இய் ★மடு—★மண்டு—★மள்-உம்-து)-பு —★மடிய்ப்பு—மடிப்பு

★நடய் (—★நடு-அய் ★நடு—★நண்டு—★நள்-உம்-து)-கு —★நடய்த்து—நடத்து

★மடய் (—★மடு-அய் ★மடு—★மண்டு—★மள்-உம்-து)-கு —★மடய்க்கு—மடக்கு

★வெடிய் (—★வெடு-இய் ★வெடு—★வெண்டு—★வெள்-உம்-து)-பு—★வெடிய்ப்பு—வெடிப்பு

★சிறய் (—★சிறு-அய் ★சிறு—★சின்று—★சில்-உம்-து)-பு —★சிறய்ப்பு—சிறப்பு

★அடய் (—★அடு-அய்). ★அடு—★அண்டு—★அள்-உம்-து) -உம்-கு—★அடய்ங்கு— அடங்கு.

உயிர் முதலாகிய விகுதிகளை ஏற்றும் ஏற்காமலும் அமையும் உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்கள், உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களின் முன் பகுதிகளாக நிகழும்போது அவை பொதுவாக வல்லொற்றுக்களின் முன் நிகழும் மெல்லொலிகளை இழந்து நிற்கின்றன. ஆனால் இம்மெல்லொலி வீழ்ச்சி அத்தகைய சொற்கள் உயிர் முதலாகிய விகுதிகளின் முன் பகுதிகளாக நடைபெறும் போது ஒரே சீராக அமையவில்லை. எ-டு. பன்றி (*பன்று-ஐ), பறி (*பறு—*பன்று-இ), பறை (*பறு—*பன்று-ஐ). வண்டி (*வண்டு-இ), வடி (வடு—*வண்டு-இ), வடை (*வடு—*வண்டு-ஐ), தொண்டை (*தொண்டு-ஐ, தொடை (*தொடு—*தொண்டு-ஐ), தொடி (★தொடு—தொண்டு-இ). வென்றி (★வென்று-இ), வெறி (★வெறு—★வென்று-இ). முண்டை (★முண்டு-ஐ), முடை (★முடு—★முண்டு-ஐ), முடி (★முடு—★முண்டு-இ).

**வேர்ச்சொற்கள்:** உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஈற்றில் கொண்ட சொற்கள் அனைத்தும் இடையொற்றுக்களை ஈற்றில் கொண்ட ஓரசைச் சொற்களின்மீது அமையப்பெற்றவையாகும்

என்ற ஒரு புது நெறியை இக்கட்டுரை அமைத்துச் செல்கிறது. இத்தகைய ஓரசைச் சொற்களைக் கண்டறிவதற்குச் சிலநெறிகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

உகரம் ஊர்ந்து ஈற்றில் அமையும் வல்லொற்றுக்கள் றகர டகரங்களாக இருந்தால் அவற்றையுடைய சொற்கள் லகர ளகரங்களை ஈற்றில் உடைய சொற்களின்மீது அமைந்தனவாகக் துணியலாம். எடுத்துக்காட்டாக வேறு (—★வேன்று), கூறு (—★கூன்று), நாடு (—★நாண்டு), கூடு (—★கூண்டு) ஆகிய சொற்கள் முறையே ★வேல், ★கூல், ★நாள், ★கூள் ஆகியவற்றின்மீது அமைந்தனவாகக் கொள்ளலாம். இங்ஙனம் கொள்வதற்குக் காரணம், லகர ளகரங்களைத் தவிர வேறு எந்த இடையொற்றும் வல்லொற்றுக்களின் முன் றகர டகரங்களாகத் திரியத்தக்கன வல்ல என்பதேயாகும்.[1] றகர டகரங்களைத் தொடராமல் இனமெல்லொற்றுக்களைத் தொடர்ந்தும், இரட்டித்தும் உகரம் ஊரப்பெற்று ஈற்றில் அமையும் க, ச, த, ப வல்லொற்றுக்களை யுடைய சொற்கள் பொதுவாக யகர ஒற்றினை ஈற்றில் கொண்ட சொற்களின் அமைந்தனவாகக் கருதலாம். எடுத்துக்காட்டாக பங்கு, துஞ்சு, கொந்து, நம்பு, ஆக்கு, ஓச்சு, பாத்தி (—*பாத்து-இ) பூப்பு ஆகிய சொற்கள் முறையே *பய்-, *துய்-, *கொய்-, *நய்-, *ஆய்-, *ஒய்-, *பாய்-, *பூய்- ஆகிய சொற்களின்மீது அமைந்தனவாகக் கொள்வதற்கு வரலாற்றுச் சான்றுகளும், ஒப்பியல் சான்றுகளும் துணைபுரிகின்றன. இடையொற்றுக்களாகிய மகர, ரகர ஈற்று ஓரசைச்சொற்கள் உகரம் ஊர்ந்த வல்

---

1. மகரம் வல்லொற்றுக்களின் முன் டகரமாகத் திரியற்பாலது எனக் குறிப்பிடுகிறது வீரசோழியம் (வீ. சோ. நூற்பா 18). இது ஓரளவுக்கு ஏற்கத்தக்கதாகவே தோன்றுகின்றது. நாடு, காடு ஆகிய சொற்கள் கன்னடத்தில் நாழ், காழ் என வழங்கும்நிலை காணப்படுகின்றது. எ-டு. நாழ் கடை, 'ஊர்க் கடை' காழ் கிச்சு 'காட்டுத்தீ'

வீற்றுகளின் முன் பகுதிகளாக அமையும்போது அவ் இடையொற்றுக்கள் வீழ்ந்து படுவனவாகத் தோன்றவில்லை.[1]

**பொருட்பேறு (Semantics):** உகரம் ஊர்ந்த வல்லொற்றுக்களை ஈற்றில்கொண்ட சொற்களின் பகுதிகளாக அமையும் இடையொற்று ஈற்றனவாகிய வேர்ச் சொற்கள் அனைத்தும் இன்று வழக்கில் பயின்று வழங்குவனவாகக் கருதுவதற்கில்லை. மேலும் உகரம் ஊர்ந்த வல்லீற்றுச் சொற்களின் பகுதிகளாக உருவமைக்கப்பெறும் இடையீற்று ஓரசைச் சொற்கள் அனைத்தும் மூலமொழியில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மைகளை உணர்த்திருக்கக் கூடுமாதலால் அவற்றின் பொருளைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியும் என்று தோன்றவில்லை. எடுத்துக்காட்டாக *அய்- என்னும் வோச்சொல் சுட்டுப்பொருண்மை, தலைமைப்பொருண்மை, கூர்மைப்பொருண்மை, அச்சப்பொருண்மை போன்றவற்றை உணர்த்தியதாகக் கருதலாம். இவ்வேர்ச் சொல்லைப் பகுதியாகக்கொண்டு தோன்றியவையே அது, அங்கு, அப்பா, அம்மா, அக்கா, அத்தை, அம்பு, அஞ்சு, அச்சம் ஆகிய சொற்கள், மூலமொழியில் அமைந்த இடையொற்றுக்களை ஈற்றில் கொண்ட ஒவ்வொரு ஓரசைச் சொல்லும் பலபொருள் ஒரு சொல்லாகவே நிகழ்ந்திருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது.

**வேற்றுமைப் பகுதிகள் (Casal Bases):** தமிழில் **ஆறு, மாடு, வயிறு,** உதடு போன்ற சொற்கள் பெயர்ச் சொற்களின் முன்பும், வேற்றுமை உருபுகளின் முன்பும் **ஆற்று, மாட்டு, வயிற்று,** உதட்டு என அமைவதாக வண்ணனை இலக்கணங்கள்

---

சேர், பார் ஆகிய வினைகள் வல்லொற்றுக்களாகிய கால இடைநிலைகளின் முன் நிகழும்போது ரகரம் வீழ்ந்துபடும் நிலை பேச்சுத் தமிழில் காணப்படுகிறது. எ.டு. சேர்-து—சேர்த்து (இலக்கியத் தமிழ்) —சேத்து) (பேச்சுத் தமிழ்). மூலமொழியில் இவ்வாறு ரகரம் கெட்டு நின்றதா என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.

(Descritive Grammars) குறித்துச் செல்கின்றன. இவ்வாறே அம் ஈற்றனவாகக் கருதப்பெறும், மரம், குளம் போன்ற சொற்களும் பெயர்களின் முன்பும், வேற்றுமை உருபுகளின் முன்பும் மரத்து, குளத்து என அத்துச்சாரியை பெற்றதாக வண்ணனை இலக்கணப் புலவர்கள் விளக்கிக் காட்டுகின்றனர். வரலாற்று நிலையில் ஆறு, மாடு, வயிறு, உதடு, மரம், குளம் போன்ற சொற்கள் பெயர்களின் முன்பும், வேற்றுமை உருபுகளின் முன்பும் ஆற்று, மாட்டு, வயிற்று, உதட்டு, மரத்து குளத்து என் அமைந்தனவாகக் கருதுவதற்கில்லை. உண்மையில் இவற்றின் அமைப்பு ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டது என்பதைப் பின் வரும் ஆய்வின் மூலம் உணரலாம்.

1. ஆறு—*ஆன்று—*ஆய்-உம்-து.
   ஆற்று—*ஆல்த்து—*ஆல்-து
2. மாடு—*மாண்டு—*மாள்-உம்-து
   மாட்டு—*மாள்த்து—*மாள்-து
3. வயிறு—*வயின்று—*வயில்-உம்-து
   வயிற்று—*வயில்த்து—*வயில்–து
4. உதடு—*உதண்டு—*உதள்-உம்-து
   உதட்டு—*உதள்த்து—*உதள்-து
5. மரம்—*மரய்ம்—*மரய்–உம்
   மரத்து—*மரய்-து
6. குளம்—*குளய்ம்—*குளய்–உம்
   குளத்து—*குளய்த்து—*குளய்-து

—தொடரும்

# மொழியியல் கலைச்சொல் விளக்கம் - 3.

—○—

சு. இராசாராம், எம். ஏ.
(இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்-6.)

Language Acquisition-மொழிபெறுதல்: மொழி சிக்கலானதும் பகுத்தறிவுக்கு எளிதில் புலப்படாததுமான பல அமைப்புக்களைக் கொண்டதாகும். இம்மொழியமைப்புக்களை நாம் வியப்புறும் வகையில் குழந்தை எவ்வாறு பெற்றுக்கொள்கிறது என்பது இன்னும் புதிராகவே இருக்கிறது. குழந்தையின் வியக்கத் தக்க இவ்வாற்றல் இன்று பல துறையிலுள்ள அறிஞர்களையும் கவர்ந்துள்ளது. குறிப்பாக உளவியலும் (Psychology) மொழியியலும் (Linguistics) இதன் பொருட்டு நடத்தி வருகின்ற ஆராய்ச்சிகள் ஏராளம். இவ்வாராய்ச்சிகள் இத்துறைக்குப் புதியன அல்ல. இருந்தபோதிலும், ஒரு தெளிவான முடிவு இன்னும் ஏற்படவில்லை என்றே கூறலாம்.

சிக்கலான மொழியமைப்புக்களைத் தெளிவாகவும் வேகமாகவும் கற்றுக்கொள்வதிலும் பின்னர் உரையாடுவதிலும் குழந்தை காட்டும் இவ்வதிசயத்தில் உளவியலின் பங்கு முக்கியமானதாகும். உளவியல் அறிஞர்களைத் தவிர மொழிநூல் அறிஞர்களையும் குழந்தையின் இம்மொழிவளர்ச்சி ஈர்த்துள்ளது. மொழியின் பரிணும வளர்ச்சியில் படிப்படியாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குழந்தை மொழியைக் கிரகிக்கும் முறையில் உண்டான வேறுபாடுகளின் காரணமாக இருக்கலாமோ என்று மொழிநூலறிஞர்களான யெஸ்பர்சன் (Jespersen) ஹாக்கெட் (Hockett) போன்ருேர் ஐயுற்றனர். இவர்களின் ஐயம் இன்னும் தீர்க்கப்படாத நிலையிலேயே இருக்கிறது. உளவியலார் (Psychologists) குழந்தையின் இம்மொழிப் பயிற்சியே வேறு பல செயல்களுக்கு அடிப்படையாகின்றது என்று கருதினர். இதன் அடிப்படையில் சில ஆராய்ச்சிகள் தொடர்ந்தபோதிலும் இன்னும் முடிவு ஏற்காத பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

இதற்கான ஒரு முக்கியமான காரணத்தை இங்கே குறிப்பிட வேண்டும்.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் கையாளப் பட்ட வழிமுறைகள் (Methodology) உளவியலேயும், மொழியியலே யும் சேர்த்து நோக்கத் தவறிவிட்டன. உளவியலாரும், மொழி யியலாரும் குழந்தையின் மனவளர்ச்சியையும் அம்மன வளர்ச்சி யில் பொழியின் வளர்ச்சியையும் ஒன்றேடொன்று தொடர்பு படுத்தி ஆராயாது தனித்தனியே செயல்பட்டுவந்தனர். விளக்கிக் கூறினல், உளவியலார் மொழியியலில் வளர்ந்துள்ள மொழியைப் பற்றிய புதிய கருத்துக்களை எடுத்தாளவும், மொழியியலார் உள வியலின் அடிப்படையில் மொழியை விளக்கத் தவறியதுமே இப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாக இருப்பதற்கு முக்கிய காரணம். இருபதாம் நூற்ருண்டில் மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சிகள் பல குழந்தையின் மொழிப் பயிற்சியில் இவ் விரு அறிவியல் துறைகளின் பங்கும் முக்கியமானவை என்பதை நிரூபித்து விட்டன. மேலும் இவ்விரண்டின் அடிப்படையில் சில சோதனைகளை மேற்கொண்டாலொழிய இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பது இன்றைய உளவியல்–மொழியிய லாரின் (Psycholinguists) கருத்தாகும்.

குழந்தையின் மூளை வளர்ச்சியிலோ உடல் வளர்ச்சியிலோ எவ்வளவோ குறைபாடுகள் இருக்கலாம். இருந்தாலும் ‘மொழி பெறுதல்’(Language acquisition) எவ்விதக்குறைபாடுமில்லாமல் குழந்தையிடம் நடைபெற்று விடுகிறது. தனது ஆருவது வய தில் குழந்தை ஒரு மொழியின் எல்லா வாக்கியங்களையும் தெளி வாகக் கற்றுக்கொள்கிறது. அத்தோடு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வாறு மொழியை ஒரு கருவியாகக் கையாளவும் தெரிந்து கொள் கிறது. குழந்தையின் இத்தாய்மொழி பெறுதல் அதன் உளவி யல் வளர்ச்சியில் முக்கியமானதும் தலையாயதுமான ஒரு செயலாகும்.

குழந்தை ஒரு மொழியைப்பெறும் முறையிலும் ஒரு மொழியியல் வல்லுநர் ஒரு மொழியை ஆராய்வதிலும் சில ஒற்றுமைகளைச் சில மொழிநிலைகளில் (Aspects) நாம் காணலாம்.

இதன் பொருள் மொழியியல் வல்லுநர் ஒரு மொழியின் மொழி யமைப்புகளை வெளிப்படையாக அலசி ஆராய்வதுபோல் குழந்தையும் ஒவ்வொரு மொழியமைப்பையும் அலசி ஆராய்ந்து கற்றுக்கொள்கிறது என்பது அன்று, ஒவ்வொரு மொழியமைப்பையும் தனக்கே புரியாத ஓர் ஆற்றலில் குழந்தை கற்றுக்கொள்கிறது என்றே கூறவேண்டும். பின்னர் அம்மொழியமைப்புக்களைத் தகுந்தசூழ்நிலைகளில்உபயோகித்து ஒத்துப்பார்க்க விழைகிறது. சுருங்கக் கூறின், குழந்தை எப்படியோ மொழியமைப்புக்களைக் கற்றுக்கொண்டு தன் சமுதாயத்திலுள்ள அங்கத்தினர்களோடு உறவாடுகிறது. இது குழந்தையின் மன வளர்ச்சியில் அதனையும் அறியாமல் நடைபெறும் ஒரு பயிற்சியே எனலாம். இவ்வாறன்றி, யாரும் அதனுடைய உபயோகத்திற்காகப் பரம்பரைச் சொத்துப்போல் மொழியைக் கொடுப்பதில்லை.

குழந்தை ஒரு மொழியைக் கற்றுக்கொண்டது என்பது பொருள் நிறைந்த-கணக்கிட முடியாத வாக்கியங்களைச் சில விதிகளின் (Rules) அடிப்படையில் ஒரு பொதுவான மொழியமைப்பின் கீழ்ப்பெற்றுக்கொண்டது என்பதாம். புதியவாக்கியங்களைப் படைக்கவும், புதிய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளவும் குழந்தை புதிய சூழ்நிலைகளை அன்றாடம் எதிர்பார்க்கின்றது. இவ்வாறு குழந்தையிடம்மொழி பல்கிப்பெறுவதற்குச்சமுதாயம் ஒரு பள்ளிக்கூடமாக இருக்கிறது எனலாம்.

முன்னர்க் கூறியதுபோல் குழந்தை ஒரு சிக்கலான மொழியமைப்மை எவ்வாறு கற்றுக்கொள்கிறது என்ற கேள்வி இன்னும் எளிதாகப் பதில்கூறி விளக்க முடியாத பகுதியாகவே இருக்கிறது. படிப்படியாக மொழியமைப்பைக் கண்டு பிடிக்கும் அதன் ஆற்றலை விளக்குகின்ற போதுமான கோட்பாடுகளோ ஆதாரங்களோ இல்லை என்றே கூறலாம். இருந்தபோதிலும் இதைப்பற்றிய இரு வேறுபட்ட கோட்பாடுகளை இங்கே விளக்கி வரைந்தால் சில கருத்துக்கள் தெளிவாகும்.

மொழி, குழந்தைக்கு இயற்கையாகவே கைவரப்பெறுகிறது என்றும், அது குழந்தைக்கு இயல்பாகவே அமைகின்ற தேவை (Inherent necessity) என்றும் பிளேட்டோ, ஸ்டாயிக்ஸ் பித்தகோரஸ் போன்ற கிரேக்க தத்துவஞானிகள் கூறுகின்றனர்

கர்ட்டேசியன் மொழியிலும்[1] (Cartesian Linguistics) இக்கருத்தையே பிரதிபலிக்கிறது என்று மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) கருதுகிறுர். இக்கருத்து, "சில கொள்கைகளும் நோக்கங்களும் இயற்கையாகவே நம் மனத்தில் உருவாகிவிடுகின்றன. இவை இயற்கையிடமிருந்து நேரிடையாக நாம் பெற்ற பரிசுகளேயாகும்" என்ற பதினேழாம் நூற்ருண்டுப் பகுத்தறிவாத உளவியலை (Rationalistic Psychology) அடிப்படையாகக் கொண்டது ஆகும். மனித மனத்திலே உருவாகின்ற இயற்கையான-பொதுவான இக்கொள்கைகளும் நோக்கங்களும் ஒன்றிற்கொன்று தொடர்புடையவை. இவைகளே ஒரு பொதுவான அமைப்பில் தேவைகளுக்கு ஏற்றவாறு ஒன்ருேடொன்று தொடர்புபடுத்தப்படுகின்றன. இவ்வாறு இயற்கையாகவே உருவாகின்றதும் மனத்திலே உள்ளடங்கி நிற்கின்றதுமாகிய இக்கொள்கைகளும் நோக்கங்களும் (Innate psinciples and notions) அறிவாலும் புறச்சூழ்நிலையாலும் உறுதிப்படுத்தப்படுகின்றன. பின்னர் இவை தகுந்த சூழ்நிலைகளில் செயல்படப் புறத்தூண்டுதலை (External Stimulation) வேண்டுகின்றன.

லெய்ப்னிஸ் என்ற அறிஞர் "முன்னரே நம் மனத்தகத்தே உருவாகாத எந்த ஒரு கருத்தையும் புறச் சூழ்நிலையில் நாம்

---

[1] ..............a constellation of ideas and interests that appear in the tradition of "universal" or "philosophical grammar", which develops from the Port-Royal Grammar generale et raisonnee (1660); in the general linguistics that developed during the romantic period and its immediate aftermath; and in the rationalist philosophy of mind that in part forms a common background for the two, Noam Chomsky, Cartesian Linguistics, Harper and Row, Publishers, New York and London, 1966.

கற்றுக்கொள்ள முடியாது"[2] என்கிறார். மனத்தகத்தே உருவாகின்ற இக்கருத்துக்கள் புறச்சூழ்நிலைகளில் தூண்டப்பட்டுத் தெளிவாகின்றன என்பதே அவர் தத்துவம். லெய்ப்னிஸின் இத்தத்துவம் பிளேட்டோவின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

மொழி இயற்கையாகவே கைவரப்பெறுகிறது என்ற பகுத்தறிவுவாதக்கொள்கை(Rationalistic view) உடையோரைப்பகுத்தறிவுவாதிகள் (Rationalists) என்று அழைப்போம். குழந்தை ஒரு மொழியை எளிதாகக் கற்றுக்கொள்கிறது என்றால் அது பிறந்த சமுதாயச் சூழ்நிலையின் பொறுப்பைவிட இயற்கையாகவே குழந்தையிடம் உருவான மொழியமைப்பே முக்கியப் பொறுப்பேற்கிறது என்பது இவர் தம் கொள்கை. விளக்கிக் கூறின், எந்த மொழிக்கும் பொருந்துகின்ற ஒரு வரைபடம் இயற்கையாகவே குழந்தையின் மனவளர்ச்சியில் அமைந்துவிடுகிறது என்பதாகும். இவ்வாறு அமைகின்ற மொழியைப்பற்றிய பொதுவான சட்டத்தில் மொழியின் மேல்நிலை அமைப்புகள் (Pariphesal Structure) புறத் தூண்டுதலால் நிரப்பப்பட்டு மொழி முழுமை பெறுகிறது.

மேற்கூறிய பகுத்தறிவாதக் கொள்கை உடையோர் தம் கருத்தைப் பல ஆதாரங்களோடு வலியுறுத்துகின்றனர். மொழியைக் கற்றுக்கொள்ளும் முறையில் பொதுவாகக் காணப்படும் சீரான முறை மனித இனத்திற்கே உரிய ஒரு பொதுவான முறையிலேயே மொழிப்பயிற்சி நடக்கிறது என்பதை நிரூபிக்கிறது. இப்பொதுவான முறையே இயற்கையாக மனித இனத்திற்குக் கைவரப்பெறும் அடிப்படையான மொழியமைப்பு ஆகும். பின்னர்ப் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு மொழிகளின் மேல்நிலை அமைப்புகள் பல்வேறு மொழிகளைக் கற்றுக்கொள்ள உதவு

---

[2] ..............nothing can be taught us of which we have not already in our minds the idea. Leibniz, G. W., von: Discourse on Metaphysics, English trans G. R. Montgomery. The Open Court Publishing Company, La-Salle, Ill, 1902.

கின்றன என்பது இவர்களுடைய வாதம்.

இரண்டாவதாக, மனித இனம் மட்டுமே பேசக்கற்றுக் கொள்கிறது. உடல் அமைப்பில் மனித இனத்தோடு பெரிதும் தொடர்புடைய சிம்பன்ஸீஸோ ஏப்போ பேசக் கற்றுக்கொள்ள முடிவதில்லை இதற்கு முக்கிய காரணம், இவைகளின் ஒலி உறுப்புக்கள் மனிதனைப்போல் ஒரு மொழியைப் பேசுவதற்குரிய அமைப்போடு இல்லை என்பதோடு மனிதனிடம் இயல்பாகவே கைவரப்பெறுகின்ற மொழியாற்றல்போல் இக்குரங்கினத்திடம் இயல்பாகவே அமையவில்லை என்பதே. இதனாலேயே சில பறவையினங்களும் மனிதனைப்போல் சில ஒலிகளை அப்படியே ஒலித்துக் காட்டினாலும் புதியசூழ்நிலைகளுக்கேற்பப் புதிய வாக்கியங்களைப் படைக்க இயலுவதில்லை. மேலும் தாம் ஒலித்துக் காட்டிய வார்த்தைகளின் பொருளும் அவைகளுக்குத் தெரிவதில்லை. மொழி என்பது இவைகளைப் பொறுத்தவரையில் பொருளற்ற ஒலிகளின் தொடர்ச்சிகளேயாகும். இவ்வொலிகளின் தொடர்ச்சிகளும் புறத்தூண்டுதலை வேண்டுகின்றன. ஆனால், புறத்தூண்டுதலுக்கு அப்பாற்பட்டுப் புதிய சூழல்களுக்கேற்பப்புதியவாக்கியங்களைப் படைக்கும்உள்ளமைப்பு (Internal Structure) மனித இனத்திற்கே உரிய ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

மூன்றாவதாக, கணக்குப் பாடத்தில் ஒரு குழந்தை மிகவும் திறமை உள்ளதாக இருக்கலாம். இன்னொரு குழந்தைக்கு அவ்வளவு திறமை இல்லாதிருக்கலா. மற்றொரு குழந்தைக்குக் கணக்கு என்றாலே பிணக்கு என்ற நிலை இருக்கலாம். இது மூளையின் வளர்ச்சியின்பாற்பட்டதாகும் இதே அறிவு நுட்பத்தின் வேறுபாட்டை இம்மூன்று குழந்தைகளும் மொழியைக் கற்றுக் கொண்ட முறையிலும் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் அறிவு நுட்பத்திலும் திறமையிலும் முற்றிலும் வேறுபடுகின்ற இம்மூன்று குழந்தைகளும் பேசக் கற்றுக்கொள்வதில் எந்தவித வேற்றுமையும் கொண்டிருக்க முடியாது. விளக்கிக் கூறினால், அறிவு நுட்பத்திற்குச் சம்பந்தமில்லாத வகையில் இம்மூன்று குழந்தைகளும் ஒரு மொழியிலுள்ள எல்லா மொழியமைப்புகளையும் கற்றுக்கொண்டன என்பதாம்.

எட்வர்டு சாபிர் என்ற மொழி நூலறிஞர் குழந்தைகளுக்கு

மொழி இயற்கையாகவே கைவரப்பெறுகிறது என்ற கொள்கையை மறுக்கிருர். குழந்தை நடை பழகுவதற்கோ அல்லது ஓடிப் பழகுவதற்கோ பெற்ருேரின் துணையையோ அல்லது மற்றவரின் துணையையோ நாடுவதில்லை. பிறவியிலேயே அமைந்துவிட்ட தசையுறுப்புகளின் அமைப்பில் குழந்தை தாஞகவே நடக்கவும் ஓடவும் பழகிவிடுகிறது. இதற்கு அக்குழந்தையின் சமூகச் சூழ்நிலையோ வேறு புறச் சூழ்நிலையோ தேவையில்லை. ஆனல் குழந்தையின் மொழி வளர்ச்சிக்கு அது வாழுகின்ற சமூகமே முக்கியமான சூழ்நிலையாகும் என்பது இவர் கருத்து. ஏனெனில் பேசுவது என்பது புறத்தூண்டுதலுக்கு அப்பாற்பட்டதும், சமுதாயத்திலிருந்து நாம் தெரிந்துகொண்டதும், கலாச்சாரத் தொடர்புடையதுமாகிய ஒரு செயலேயாகும்.[3]

எந்த மொழியமைப்பும் இயல்பாகவே மனிதமனத்தில் உருவாகுவதில்லை. மொழி என்பது அனுபவத்தால் மாத்திரமே கற்றுக்கொள்ளக்கூடிய புறச்செயலாகும் என்ற உலகாயுத வாதத்தை(Empiricistic view` உடையோரை உலகாயுதவாதிகள் (Empiricists) என்று அழைப்போம்.

நாம் பேசக் கற்றுக்கொண்டோம் என்ருல் அது நாம் குழந்தையாக இருந்தபோது கற்றுக்கொண்ட ஒரு பயிற்சியே. இப்பயிற்சிக்கு முன்னர்க் குறிப்பிட்டதுபோல்—பகுத்தறிவாதக் கொள்கையைப்போல் எந்தவிதப்பொதுவான மொழியமைப்பும் மூலமாகவோ ஆதாரமாகவோ அமைவதில்லை. இப்பயிற்சி குழந்தையின் நிர்மலமான மனத்தில் ஆரம்பித்துத் தொடர்ந்து வளர்கிறது. சுருங்கக் கூறினல் எதையும் முழு ஆதாரமாகக் கொண்டு குழந்தை மொழியைக் கற்பதில்லை.

குழந்தையின் நலத்திலும் தன்னுடைய குழந்தை மற்றக் குழந்தைகளைப்போல் மொழியை வேகமாகவும் தெளிவாகவும்

---

3...........Speech is a non-instinctive, acquised, "cultural," function. Edward Sapir, Language, A Harvest Book, Harcourt, Brace and Company, New York, 1921. pp. 4.

கற்றுக்கொள்கிறது என்பதிலும் அக்கறைகொண்ட பெற்றோரும் குழந்தையின் மொழி வளர்ச்சியைப் படிப்படியாகக் கவனித்து வருகின்றனர். குழந்தை மொழியைக் கற்கும் பருவத்தில் ஒலியளவிலோ பொருளளவிலோ தவறிழைக்கும்போது அவர்கள் அத்தவற்றைத் திருத்தி மொழியைப் பயிற்றுவிக்கின்றனர். இத்திருத்தம் குழந்தையின் பிந்திய மொழி வளர்ச்சிக்கும் மழலை மொழிக்கும் ஒரு இணைப்புப் பாலமாக அமையும் என்று நாம் நம்புகிறோம். ஆனால் இத்திருத்தத்திற்குக் குழந்தையின் மொழி வளர்ச்சியில் எவ்விதப் பங்குமில்லை என்றே உலகாயுதவாதிகள் கருதுகின்றனர். குழந்தை வேண்டுவதெல்லாம் தான் பெற்ற மொழியை வெளிப்படுத்தி உறவாட ஒரு சமுதாயமே.

குழந்தை, எவ்வாறு ஒரு மொழியைப் படிப்படியாகத் தெரிந்துகொள்கிறது என்பதை விரிவாகப் பார்ப்போம். இதைப் பொறுத்த வரையில் பல கருத்துக்கள் இன்னும் தெளிவாக்கப் படாதிருக்கின்றன என்றாலும் சில கருத்துக்களைத் தெரிந்து கொள்வதின் மூலம் நடந்துவருகின்ற ஆராய்ச்சிகள் பலவற்றின் அடிப்படைகளைத் தெரிந்துகொள்ள முடியும்.

குழந்தை பிறந்த சில மாதங்களில் அழுகையின் மூலமாகவும் முனகலின் மூலமாகவும் தன்னுடைய உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறது. குழந்தையின் பசியோ உடல் நோவோ இவ்வழுகைக்கும் முனகலுக்கும் தூண்டுதலாக அமையலாம். எனவே இப்பருவத்தில் குழந்தையின் மொழி வெளிப்பாடு தூண்டுதலையே (Stimulus) ஆதாரமாகக் கொள்கிறது. உளவியலறிஞர் குழந்தையின் அழுகையைப் பசி காரணமாக வரும் அழுகை, உடல் நோவால் வரும் அழுகை என்று பலவாறாகப் பகுத்துள்ளனர். இது குழந்தையின் உடல் வளர்ச்சியோடு தொடர்புடையதன்றிக் குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்பு உடையதன்று. ஆனால் குழந்தையின் இவ்வழுகையும் முனகலுமே மொழியின் பல்வேறு ஒலிகளையும், ஒலித்தொடர்ச்சிகளையும் எளிதாக ஒலிக்க உதவுகின்றன. அதாவது மொழியில் வழங்கும் ஒலிகளைச் சரியாக ஒலிப்பதற்கு முன்னேற்பாடாக ஒலியுறுப்புக்கள் ஆற்றல் பெறுகின்றன.

சில மாதங்களுக்குப் பிறகு குழந்தை மெதுவாக மழலை

மொழியைப் பேசத் தொடங்குகிறது. பிறந்த சில மாதங்களில் குழந்தையிடம் காணப்படுகின்ற பொருளற்ற ஒலிகளையும் அழுகையையும் போலல்லாது சிறிது வேறுபட்ட அதே நேரத்தில் மொழிக்கு முதல்படியாகச் சில ஒலிகளைக் குழந்தை பேசுகிறது. இதையே நாம் மழலை மொழி என்கிறோம். இம்மழலை மொழியிலேயே ஒலிகளின் இரு பெரும் பிரிவுகளாகிய உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் குழந்தை பேசத் தெரிந்துகொள்ளவும் ஒலியளவில் அவற்றிடையே உள்ள வேற்றுமைகளைத் தெரிந்துகொள்ளவும் செய்கிறது. இம்மழலை மொழிக்கும் முந்திய சில மாதங்களில் குழந்தையிடம் அமைந்திருந்த மொழிக்குமிடையே உள்ள வேற்றுமையைவிட மழலை மொழிக்கும் பிந்திய மொழிக்குமிடையே உள்ள வேற்றுமை மிகவும் குறைவு என்றே கூறவேண்டும். ஏனெனில் ஒழுங்கான ஒரு மொழியமைப்பைப் பின்னர் குழந்தை தெரிந்துகொள்ள உதவும் சீர்படாத ஒரு மொழியமைப்பே இம்மழலைமொழியாகும்.

இம்மழலை மொழி குழந்தையின் புறச் சூழ்நிலைகளோடு சிறிது தொடர்புடையதுமாகும். சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மொழியைக் கையாளுகின்ற திறமை புதிய சொற்றொடர்களை உருவாக்குகின்ற ஆற்றலில் இப்பருவத்தில் அமைந்திராவிட்டாலும் குறிப்பிட்ட சில ஒலித்தொடர்களின் மூலம் தன் கருத்தை குழந்தை வெளிப்படுத்திவிடுகிறது.

ஏழு அல்லது எட்டாவது மாதத்தில் குழந்தையின் மழலை மொழியில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. சைகைகளையும் சொற்களையும் குழந்தை எளிதில் புரிந்துகொள்கிறது. இப்பருவத்தில் மொழியின் வளர்ச்சி குழந்தைக்குக் கிடைக்கின்ற பல்வேறு விதமான மொழி அனுபவங்களையே அடிப்படையாகக் கொள்கிறது என்பர். சொற்றொடர்களையும் அதிகமாக வழங்கப்படுகின்ற ஒலியன்களையும் பகுத்தறியும் திறனை இப்பருவத்தில் பெறுகிறது. ஒலிக்கின்ற அளவில் சிறிது வேறுபாடு உடைய பல சொற்களை முதலில் குழந்தை சுலபமாகக் கற்கிறது. இருந்தாலும் சொற்களை ஓரளவுக்குப் பிழையில்லாமல் பேசும் திறன் ஒரு வயதிலேயே குழந்தைக்குக் கைவரப்பெறுகிறது எனலாம். சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு மொழியைக் கையாளுவது ஒரு பிரச்சினையாகவே இவ்வயதில் குழந்தைக்கு இருக்கும். பன்னி

ரண்டிலிருந்து பதினெட்டு மாதங்களுக்குள்ளாக ஒருசொல் சொற்றொடர்களை (One-word Sentences) கற்றுக்கொண்டு பேச ஆரம்பிக்கின்றது.

—○—

ஐந்து அல்லது ஆறு வயது ஆகும்போது மொழியிலுள்ள ஒலியன்களை வேறுபடுத்தவும் சொற்கள் சொற்றொடர்களாக அமைக்கப்பட வேண்டிய முறைமையையும் மொழியின் இலக்கண அமைப்பையும் குழந்தை தெரிந்துகொள்கிறது. ஒரு மொழிக்கான அடிப்படை இவ்வயதில் குழந்தையின் மனத்தில் அமைகிறது என்பதோடு இதற்குப் பின் வேற்று மொழியைக் கற்பதும் கடினமாகிவிடுகிறது. மொழியியல் அறிஞர் ஹாக்கெட் ஆறுவயதிற்குப் பின்னர் குழந்தைக்கு ஒரு புதிய மொழியின் ஒலியமைப்பை (Phonemic System) புரிந்துகொள்வது கடினமாகிறது என்று தனது அனுபவவாயிலாகக் கூறுகிறார்.

குழந்தை பள்ளிக்கு வரும்போது புதிய சொற்றொடர்களையும் இலக்கண அமைப்புக்களையும் முந்திய மொழியமைப்பின் ஆதாரத்தில் சுலபமாகக் கற்கிறது. பள்ளியைத் தவிர வெளியுலகத்தில் உள்ளவர்களோடும் பல சூழ்நிலைகளில் தங்கு தடையின்றி உறவாட இம்மொழிப் பயிற்சி உதவுகிறது. இப்பருவத்தில் குழந்தைக்கு வேண்டுவதெல்லாம் மொழியைப் பேசவும், புரிந்துகொள்ளவும் தகுந்த வாய்ப்புக்களே.

இத்துறையில் பல ஆராய்ச்சிகள் இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இவ்வாராய்ச்சிகளில் மொழியியலின் இன்றைய வளர்ச்சியின்பங்கும் உளவியலின் பங்கும் குறிப்பிடத்தக்கவையாகும்.

—✻—

# எட்டு.

—○—

பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல், மைசூர் மாநிலம்.

மனிதனுக்கில்லாத அரும்பெருங் குணங்களை யுடையவன் இறைவன். இறைவனுக்கு எட்டுத் தலையாய குணங்கள் உண்டு என்பதை நம் சான்றோர் நூல்கள் வாயிலாக நன்கு அறியலாம். சைவ ஆகமப்படி இறைவனின் எட்டுக் குணங்களாவன :- தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை. ஆருகத நூலின்படி கடவுளுக்குரிய எட்டுக்குணங்களாவன:- வரம்பில் ஞானம், வரம்பில் காட்சி, வரம்பில் இன்பம், வரம்பில் ஆற்றல்' நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, இடையூறின்மை. இறைவனுக்குரிய எட்டுக் குணங்களையும் திருவள்ளுவர் குறிப்பிட்டிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

" கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை,"

தமிழில் உள்ள மிகத் தொன்மையான தொகை நூல் எட்டுத் தொகையாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு (நெடுந்தொகை), புறநானூறு முதலிய எட்டும் எட்டுத்தொகை எனப்படும் ஒவ்வொன்றும் புலவர் பலரின் பாடல்களால் அளவு, பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பெற்றமையால் இதற்குத் தொகை என்னும் பெயர் ஏற்பட்டது. குறுகிய பாட்டுக்களால் ஆகியவை ஐங்குறுநூறு, குறுந்தொகை முதலியன. அகப்பொருளைப்பற்றிய நீண்ட பாக்களால் தொகுக்கப்பட்டது அகநானூறு அல்லது நெடுந்தொகை. புறத்தைப்பற்றியது புறநானூறு. ஒவ்வொரு சேர வேந்தனைக் குறித்தும் பத்துப் பாட்டுக்கள்வீதம் பதின்மரைப்பற்றிய தொகை பதிற்றுப் பத்து. இதில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் இன்று கிடைக்கவில்லை.

கலியாப்பில் அமைந்த பாடல்கள் கலித்தொகையாகக் காட்சியளிக்கின்றன. பரிபாடல் என்னும் ஒரு வகைப் பாவினால் இயற்றப்பெற்றது, பரிபாடல். புறநானூறும் பதிற்றுப் பத்தும் புறப்பொருளைப் பற்றிக் கூறுகின்றது. அகம், புறம் ஆகிய இரண்டையும் பரிபாடலில் காணலாம். ஏனையவை சங்ககாலத் தமிழரின் காதல் வாழ்வைச் சொற்சுவை, பொருட்சுவை ஆகிய இலக்கிய நயத்துடன் எடுத்து இயம்புகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் எட்டுத் தொகை தனிச் சிறப்புடன் திகழ்கின்றது.

பகுத்தறிவற்ற விலங்குகளாகப் பிறந்து உழல்வதைவிடப் பகுத்தறிவுள்ள மனிதனாகப் பிறந்து சிறக்க வாழ்வது மேல். 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்னும் நம் முன்னோர் அமுத மொழி ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. மனிதப் பிறப்பில் குருடு, பிண்டம், கூன், குறள் (குள்ளன்), ஊமை, செவிடு, விலங்கு வடிவு அறிவின்மை ஆகிய எட்டுக் குறைபாடுகள் உண்டு. இக்குறைகளற்ற மனித உடம்பே பயனுள்ள உடம்பாகும். இவ்வெண்வகைக் குறைகளையும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமுஞ் செவிடும்
மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்சம் என்றிவை எல்லாம்
பேதமை அல்லது ஊதியம் இல்லென
முன்னும் அறிந்தோர் கூறினர்."

—புறநானூறு-28.

ஒரு நூலுக்குச் சிறப்புப் பாயிரம் இன்றியமையாதது. நூலைப்பற்றிய முழு விபரங்களையும் சிறப்பாக எடுத்துரைப்பது சிறப்புப் பாயிரம். சிறப்புப் பாயிரம் பிறரால் இயற்றப்பட வேண்டுமே தவிர நூலாசிரியரால் இயற்றப்படுவது சிறப்பன்று. நூலின் பல்வேறு சிறப்புக்களை அதன் ஆசிரியரே புகழ்ந்துரைப்பது நன்றன்று.

'தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே'

—நன்னூல்.

நூலாசிரியர் பெயர், நூல் வந்த வழி, நூல் வழங்கும் இடம், நூலின் பெயர், இந்நூல் படித்தபின்பு இனிப் படிக்கவேண்டிய நூல் என்னும் இயைபு, நூல் கருத்து, நூல் கற்றற்குரிய மாண வர், நூலின் பயன் ஆகிய எட்டுக் குறிப்புக்களும் சிறப்புப் பாயிரத்தில் (அணிந்துரை) அடங்கியிருத்தல் வேண்டும்.

'ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே'

என்று நன்னூல் நவில்கின்றது.

ஒரு நூலுக்குப் பெயர் ஏற்பட எட்டு அடிப்படையான காரணங்கள் உண்டு. முதல் நூல், நூல் ஆசிரியர், நூல் அளவு, மிகுதி, பொருள், நூல் செய்வித்தோன், நூலின் தன்மை, இடு குறி ஆகிய எட்டின் அடிப்படையிலும் நூலுக்குப் பெயர் ஏற் படும். இராமாயணம், பாரதம் முதலியன முதல் நூலாற் பெயர் பெற்றன. இவை இரண்டையும் பல மொழிகளில் பலர் இயற்றி யிருந்தாலும் அவற்றின் முதல் நூல் பெயரே வழங்குகின்றன. அகத்தியம், தொல்காப்பியம், சேனாவரையம் ஆகியவை நூல் ஆசிரியரின் பெயர் அடிப்படையில் அமைந்த பெயர்களாகும். அகத்தியரால் இயற்றப்பட்டது அகத்தியம். இந்நூல் இப்போது கிடைப்பதில்லை. தொல்காப்பியர் இயற்றியது தொல்காப்பியம். தொல்காப்பியத்திற்குச் சேனாவரையர் எழுதிய உரை சேனாவரை யம் எனப்படும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து, நாலடியார், குறள் முதலிய நூல்கள் அளவினால் பெயர் பெற்றன. களவியல் முதலிய நூல்கள் மிகுதியால் பெயர் பெற்றன. இந்நூல் அகப்பொருளைப்பற்றியதாயினும் களவியல் மிகுதியாகக் கூறப்பட்டிருப்பதால் இப்பெயர் பெற்றது. பொரு ளால் பெயர் பெற்றன சிலப்பதிகாரம் முதலியவை. சாதவாகனம் முதலிய நூல்கள் செய்வித்தோனால் பெயர் பெற்றவை. தன்மை யால் பெயர் பெற்றது நன்னூல். (நல்ல நூல்) கலைக்கோட்டுத் தண்டு என்னும் நூல் இடுகுறியால் (காரணமில்லாமல்) பெயர் பெற்றது.

'முதல்நூல் கருத்தன் அளவு மிகுதி,
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானுநூற் செய்தும் பெயரே'

என்பது நன்னூல் நூற்பா.

செய்யுள் உறுப்புக்களில் தொடையும் ஒன்று தொடை எட்டு வகைப்படும் அவையாவன:- மோனைத் தொடை, இயை புத்தொடை, எதுகைத்தொடை, முரண்தொடை, அளபெடைத் தொடை. அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந் தொடை இவற்றின் விரிவான விளக்கத்தை யாப்பிலக்கணத்தில் காணலாம்.

அரசர்க்குத் துணைவர் எட்டு வகைப்படுவர். அமைச்சர்' கருமக்காரர், கற்றம், கடை காப்பாளர், நசரமாந்தர், படைத் தலைவர், இவுளி மறவர் (குதிரை வீரர்), யானைவீரர் முதலிய எண் வகையினரும் அரசர்க்குத் துணைவர் ஆவர். அரசாங்கம், மக்கள் சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை ஆகிய எட்டும் சிறந்த ஐசுவரியங்களாகக் கருதப்பெற்றன. பெண், ஆடை, அணிகலன், உணவு, தாம்பூலம், நறுமணம் (பரிமளம்), பாட்டு, பூப்படுக்கை ஆகியவை எட்டு வகைப் போகப் பொருள்களாகும். சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல் ஆகிய எட்டும் மங்கலப் பொருள்களாகும். மனித உடம்பு அவரவர் கையால் எட்டுச் சாண் உயரமுள்ளது. மனித னுக்குரிய ஐம்பொறிகளில் நாற்பொறி தலையில் இருப்பதால் 'எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்னும் பழமொழி தோன்றிற்று.

அடிப்படைத் திக்குகள் நான்காயினும் அவற்றின் வழியே எட்டுத் திக்குகள் தோன்றியுள்ளன. 'எண்டிசை' என்னும் சொல்லாட்சி நம் இலக்கியத்தில் பரவி வருவதைக் காணலாம். எண்டிசையாவன:- கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு. ஒவ்வொரு திக்கிற்கும் ஒவ்வொரு பாலகர் இருப்பதாகக் கூறுவது புராண மரபு. இந்தி ரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசா னன் ஆகியோர் திக்குப் பாலகர் எனப்படுவர். ஒவ்வொரு திக்

கிற்கும் ஒவ்வொரு யானையை இணைத்துக் கூறுவது புராண வழக்கு. ஐராவதம், தண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் ஆகிய எட்டும் திக்கு யானைகள் எனப்படும். காட்சி எட்டுவகைப்படும். அவையாவன: ஐயப்படாமை, அவாவொன்றின்மை, அறிவு உவர்ப்பின்மை, மூட மறுத்தல், அறப்பழியழித்தல், அழிந்தோரை நிறுத்தல், அறத்தை விளக்கல், அறுசமயத்தவர்க்கு (எல்லோர்க்கும்) அன்புறல். புராண மரபுப்படி எட்டு வசுக்கள் உண்டு. எட்டு வசுக்களாவன:- அனலன், அணிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன். சிலரால் ஒரு காலத்தில் ஒரு பொருளில் மட்டுமே கவனம் செலுத்த முடியும். வேறு சிலரால் ஒரே காலத்தில் வேறு வேறான எட்டுப் பொருள்களிற் கவனம் செலுத்த முடியும். அம்முறைக்கு அட்டாவதானம் என்றும் பெயர். மனிதப் பிறவியின் பயன் வீடு பேற்றை அடைவதே. அதுவே நிலைத்த பேரின்பம் என்பது சான்றோர் துணிபு. அப்பேரின்பத்தை அடைய முறையாகவும் ஒழுங்காகவும் வகுத்த நன்னெறியே யோகம் எனப்படும். யோகம் எட்டுப் படிகளைக் கொண்டது. இதை வடமொழியில் அட்டாங்க யோகம் என்று குறிப்பிடுவர். யோகத்தின் எட்டுப்படிகளாவன:- இயமம், நியமம், ஆசனம் பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவ்வெட்டையும் மனிதனின் ஆன்மீக வளர்ச்சிப் படிகள் என்று இயம்பலாம். கொல்லாமை, உண்மை, கள்ளாமை பிறர் பொருள் நயவாமை, புலனடக்கம் ஆகியவை இயமம் எனப்படும். தவம், தூய்மை, மெய்ப்பொருள் நூல் அறிந்துணர்தல், மன அமைதி, இறைவழிபாடு ஆகியவை நியமம் எனப்படும். கடவுளைச் சந்திப்பதற்கு அமர்கின்ற ஒழுங்கான முறை ஆசனம் எனப்படும். மூச்சை உள்ளடக்கி வெளியிடுகின்ற பயிற்சிக்குப் பிராணாயாமம் என்று பெயர். ஆசனமும், பிராணாயாமமும் நோயைப் போக்குவதுடன் இளமை, உடல் நலம், நீண்ட ஆயுள் ஆகியவற்றைத் தரும் ஆற்றல் வாய்ந்தவை. சிந்தனையை இங்கும் அங்கும் சிதறவிடாமல் இருப்பது பிரத்தியாகாரம். மனத்தை ஒரே நிலையில் நிறுத்துவது தாரணை. (single-minded attention) இறைவன் ஒருவனையே சிந்திப்பது தியானம். நனவு நிலையைக் கடந்த அமைதி நிலை சமாதி எனப்படும். இவ்வெட்டுப் படிகளும் முறையாகவும், ஒழுங்காகவும் அமைந்திருக்கும் பெற்றி ஈண்டு நோக்கி மகிழத்தக்கது. இப்படிகளை அறிவு நெறியில் ஒழுங்காக

வகுத்துக் கலைவடிவில் தந்தவர் பதஞ்சலி மகரிஷி. மனிதனின் ஆன்மீகத் துறையில் அட்டாங்கயோகம் மிகவும் குறிப்பிடத் தக்கது என்பது நன்கு புலனாகின்றது.

யோக நெறியில் நின்று பேறு பெற்றவர்கள் சித்தர்கள் சித்தர்கள் பெற்ற வெற்றி சித்தி எனப்படும். சித்தி எட்டுவகைப் படும். அவையாவன: அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் அணுவைவிட மிகச் சிறியஉருவில் உலவும் ஆற்றலுக்கு அணிமா என்று பெயர். மலையை விடப் பெரிய உருவம் பெறும் ஆற்றலுக்கு மகிமா என்று பெயர். உடலை எவ்வளவு பளுவாக வேண்டுமானாலும் செய்து கொள்ளும் ஆற்றல் கரிமா எனப்படும். உடம்பை மிக மென்மை யாக வைத்துக்கொண்டு நீரில் மூழ்காமலும் சேற்றில் அழுந்தா மலும் காற்றைப்போல் விரைந்து இயங்கும் ஆற்றலுக்கு இலகிமா என்று பெயர். விரும்பியதை விரும்பியவாறே பெறும் ஆற்றல் பிராத்தி எனப்படும். தன் நினைப்பின் வல்லமையால் அனைத்தையும் படைக்கும் ஆற்றலுக்குப் பிரகாமியம் என்று பெயர், எல்லோரும் தன்னை வணங்குமாறு இறைத்தன்மை பெறுவது ஈசத்துவம் உலகம் முழுவதையும் தன் வயப்படுத்தி நடத்தும் ஆற்றல் பெற்றிருப்பது வசித்துவம் இவ்வெண்வகைச் சித்திகளும் அட்டமா சித்தி எனப்படும்.

தமிழ் இலக்கணத்தில் அமைந்துள்ள பல்வேறு சிறப்புக் களில் ஒன்று வேற்றுமை. சொற்பொருளை வேறுபடுத்திக் காட்டு வதே வேற்றுமை எனப்படும். தமிழ் மொழியில் எட்டு வேற்று மைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வேற்றுமைக்கும் (முதல் வேற் றுமையைத் தவிர) தனித் தனியே உருபு உண்டு. உருபு, அள வில் மிகச் சிறியதாயினும் சொற்பொருளைத் தெளிவாக வேறு படுத்திக் காட்டுவதில் பேராற்றல் வாய்ந்தது. உருவு கண்டு எள்ளல் கூடாது என்பதை வேற்றுமை உருபு மெய்ப்பித்த வண்ணம் இருக்கின்றது. இவ்வேற்றுமை உருபின் ஆற்றலை ஒரு சில எடுத்துக் காட்டுகளின் வாயிலாக உணரலாம்.

1. இராமன் கொன்றான்—எழுவாய் வேற்றுமை.
2. இராமனைக் கொன்றான்—இரண்டாம் வேற்றுமை.

இராமன் கொலைபுரிந்தான் என்பது முதல் வாக்கியத்தின் பொருள். இராமன் கொலையுண்டான் என்பது இரண்டாம் வாக்கியத்தின் பொருள். இராமன் கொலை செய்தவன் என்பதை முதல்வாக்கியமும், இராமன் கொலை செய்யப்பட்டவன் என்பதை இரண்டாம் வாக்கியமும் குறிப்பிடுகின்றன. இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ' இவ்விரண்டிற்குமுள்ள பொருளை வேறு படுத்திக் காட்டுகின்றது.

1. கல்லை உடைத்தான்—இரண்டாம் வேற்றுமை.

2. கல்லால் உடைத்தான்—மூன்றும் வேற்றுமை.

உடைபட்ட பொருள் கல் என்பதை முதல் வாக்கியம் உணர்த்து கின்றது. ஏதோ ஒரு பொருளை உடைப்பதற்கு உதவியாக (கருவியாக) இருந்தது கல் என்று இரண்டாம் வாக்கியம் உணர்த்துகின்றது,

1. கந்தன் பரிசு கொடுத்தான்—எழுவாய் வேற்றுமை.
2. கந்தனுக்குப் பரிசு கொடுத்தான்—நான்காம் வேற்றுமை

கந்தன் பிறர்க்குப் பரிசு கொடுத்தான் என்பது முதல் வாக்கியத் தின் பொருள். கந்தன் பிறரிடமிருந்து பரிசு வாங்கினன் என் பது 2-வது வாக்கியத்தின் பொருள். இவ்வாறு வேற்றுமையின் ஆற்றலை விளக்கிக்கொண்டே செல்லலாம். வேற்றுமை, வேற் றுமை உருபு ஆகியவற்றை நுண்ணிய முறையில் நம் இலக்கண நூல்கல் நன்கு விளக்குகின்றன.

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறுய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை."

"பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளியென் ருகும் அவற்றின் பெயர் முறை"

இவ்விரு நன்னூல் நூற்பாக்களும் இவண் நோக்கத் தக்கன.

மக்கள் கூடுகின்ற இடத்திற்கு அவை என்று பெயர். நல்லோர் குழுமியுள்ள அவை நல்லவை, புல்லர்கள் கூடியுள்ள அவை புல்லவை. குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை ஆகிய

எண்வகைப் பண்பு நலன்கொண்ட நல்லோர் அவ்வ பேரவை எனப்படும். தொல்காப்பியர் இத்தகைய பேரவையை 'எட்டு வகை நுதலிய அவையத்தானும்' என்று குறிப்பிடுகின்றார். இதை விளக்கிப் பாடுகின்றது ஆசிரிய மாலை. இதோ அப்பாடல்:

"குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காத லின்பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாஅ வின்மையென
இருபெரு நிதியமும் ஒருதா மீட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை."

இவ்வாறு 'எட்டு' பலவகையிலும் சிறப்புடன் விளங்குகின்றது.

———*———

# சங்க இலக்கியச் சான்றுகள்

## பகைமை

—○—

(பண்டித வித்துவான் ச. சாம்பசிவன், தமிழ் விரிவுரையாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை–1.)

மனிதன் தன் அறிவாற்றலால், நெடுந்தொலைவிலுள்ள வெண்ணிலாவையும் அணிமைப் பொருளாக ஆக்கிவிட்டான். அறிவுலகில் எத்தனை எத்தனையோ விந்தைகள்; மாற்றங்கள். ஆனால் மனிதன்பாலுள்ள அன்பு, அருள், அழுகை, உவகை' காதல், வீரம், வளமை, வறுமை, பகைமை, கேண்மை, குடிமை' இறைமை முதலான பண்புகள் மாறவில்லை. எனவேதான் 2000 ஆண்டுக்கு முற்பட்டு வாழ்ந்த புலவர்கள் பாடிய காதற் கவிதைகளை இப்பொழுது படித்தாலும் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. கையறு நிலைச் செய்யுட்களைப் படிக்கும்போது நம்மையறியாமலே கண்ணீர் சிந்துகின்றோம்.

இத்தகைய பண்புகள் அமைவதற்குச் சில அடிப்படைக் காரணங்கள் உண்டு. பகைமைப் பண்பு எதனால் உண்டாகின்றது? அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றின் அடிப்படையில் இஃது உண்டாகிறது எனலாம். இத்தகைய பகைமை நல்லதா? கெட்டதா? கெட்டது என்றே அறிஞர் கூறுவர். ''பகை—தீமை பயப்பது; ஒருவன் விளையாட்டிற்காக வேனும் அதனை விரும்புதல் கூடாது'' என்கிறார் வள்ளுவர்.

''பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று'' (குறள் 871)

என்பது அவர் வாக்கு. ஆனால் இவ்வுலக வாழ்விலே இஃது இயலுமா? ஒருகாலும் இயலாது. 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்' என்பது தனி மனித வாழ்வுக்கு ஏற்புடைத்தாயினும், பொது வாழ்வில்—சிறப்பாக நாட்டாட்சியில் 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தலே தக்கதாகக் கொள்ளப்படும்.

நாட்டினை ஆள்வோர் தன் நாட்டு மக்களைப் பகைவர் முதலானோர் நலியாமற் காத்தல் வேண்டும். அப்பகைவரில் உட்பகையாயிருந்து கெடுப்போருமுண்டு. புறப்பகையாயிருந்து அடுப்போருமுண்டு. எவ்விதப் பகைவராயினும் ஒற்றர் மூலம் அறிந்து அவரை ஒறுத்தல் வேண்டும்.

புறப்பகையினைத் தணித்தற்கு எடுத்த எடுப்பிலேயே போரினைத் தொடங்குதல் அறிவுடைமையாகாது. வேற்றவரிடத்துத் தூது போக்கி, அமைதி வழியினையே நாடவேண்டும். அதில் வெற்றி கிட்டாமற்போமாயின், போரினை மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொள்ளும்போதும், வலி, காலம், இடம் முதலானவற்றை நன்கு அறிந்து, எண்ணித் துணியவேண்டும்.

தன் நாடு பசியும், பிணியும் இன்றித் திகழவேண்டுமாயின் முதற்கண் பகை என்னும் இருளினைக் கெடுக்கவேண்டும். இங்ஙனம் கெடுக்க வல்லது பொருள் என்னும் பொய்யா விளக்கமே யாம்! செறுநர் செருக்கறுக்கும் எஃகு பொருளேயன்றி வேறொன்றுமன்று. பகைவரைத் தொலைத்து அவர்தம் நாட்டகத்துப் பொருளைத் தன் நாட்டின் வளத்துக்குப் பயன்படுத்துதல் மரபு. அன்றிப் பணிந்து செல்லும் பகைவரிடத்துத்திறைப்பொருள் பெறுதலும் உண்டு. இப்பொருள் 'ஒன்னார்த் தெறுபொருள்' எனப்படும். பகையை வெல்லப் படை தேவை. அப்படையும் கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றல்பெற்றதாயிருக்க வேண்டும். பகைவரால் உண்டாகும் அழிவினைத் தடுக்கத் தன் நாட்டில் மணிநீரும், மண்ணும், மலையும் அணிநிழற் காடும் ஆகிய அரண்கள் அமைய வேண்டும். உறுபசி, ஓவாப்பிணி, செறுபகை, பல்குழு, பாழ் செய்யும் உட்பகை, வேந்தலைக்கும் கொல் குறும்பு இல்லாமையே சிறந்த நாடாகும். இவ்வடிப்படையை வைத்துக் கொண்டு பகைமையைப்பற்றிச் சங்க இலக்கியங்களிலிருந்து சில சான்றுகள் காண்போம்.

தொண்டை நாட்டை ஆண்ட தொண்டைமான் என்பான், தன்பால் படைக் கருவிகள் பலவாக இருத்தலை எண்ணிச் செருக்குற்று, அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பகைமை கொண்டான். அவனது அறியாமையை அறிந்த அதியமான், போரின் கொடுமையையும், அதனால் நாட்டு மக்களுக்கு ஏற்படும் நலிவையும் தெளிந்துகொள்ளுமாறு அறிவித்தற்கு

ஔவையாரை அவன்பால் தூதுவிட்டான். ஔவையாரோ தொண்டைமானிடம் தூது சென்றார். அவன் தன் படைக்கலக் கொட்டிலின் பெருமையைக் காட்டினன். ஔவையாரும் அதனைக் கண்டு அதியனைப் பழிப்பதுபோலப் புகழ்ந்தும், தொண்டைமானைப் புகழ்வது போல இகழ்ந்தும் ஒரு பாடல் பாடினார். "இங்குள்ள கருவிகள் பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டு, நெய் இடப்பட்டுப் பாதுகாப்பாக உள்ளன. ஆனால் எம் அதியனுடைய கூரிய நுனியையுடைய வேல்களோ, பகைவரைக் குத்துதலால் நுனியும், நடுப்பகுதியும் சிதைந்து, கொல்லனது உலைக்களத்தில் கிடக்கின்றன" என்றார் அவர். தொண்டைமான் அதியனின் வீரத்தை உணர்ந்து, பகைமையை மறந்து பண்பாளனானான். ஔவையின் தூது வெற்றி கண்டது. (புறம் 95.)

குமணன் என்பான், பழந்தூங்கு முதிரத்துக் கிழவன். இசை மேந்தோன்றிய வண்மையொடு, பகை மேம்படத் திருந்து வேலினை ஏந்தியவன். இக்குமண வள்ளலுக்கு இளவலாய் வாய்த்தவன் இளங்குமணன். தன் தமையனுக்கு உண்டாயபுகழ் குறித்து அழுக்காறு கொண்டான். அது பகைமையாய்த் தளிர்த்தது. அண்ணனை நாட்டினின்றும்விரட்டி ஆட்சியைக் கைப்பற்றினான். இறுதியில் அண்ணனைக் கொல்லுவதற்குச் சூழ்ந்தான். நாட்டைவிட்டு நீங்கிய குமணன் காட்டில் காலங்கழித்தான். வறுமையால் வாடிய பெருந்தலைச் சாத்தனார் பரிசில் பெறக் குமணனை நாடிவந்தார். உண்மைநிலை உணர்ந்தார். உடன் பிறந்தார் இருவருக்கும் இடையேநிலவிய பகைமையைப் போக்கி ஒற்றுமை உண்டாக்க உறுதி பூண்டார்; காடு நோக்கி விரைந்தார்; குமணனைக் கண்டார்! "இன்மை தீர்க்கும் குடிப் பிறந்தோய்! பாலில்லாமல் குழந்தை தாய் முகம் நோக்க, அவள் என் முகம் நோக்க, யான் நின் முகம் நோக்கி வந்தேன்" என்றார். குமண வள்ளலோ "தன் தலைதனைக் கொண்டுபோய்த் தம்பி கைகொடுத்து விலைதனைப் பெறுக" என வேண்டித் தன் வாளினை எடுத்துப் புலவரிடம் தந்தான். வியர்வை அரும்ப, நாக்குழற, மெய் சிலிர்க்க, கரங்கள் நடுங்க அவ்வாளினை வாங்கிய பெருந்தலைச் சாத்தனார், காற்றினும் கடிதாய் இளங்குமணன்பாற் சென்று "கேடில் நல்லிசை வயமான் தோன்றலாம் நின் தமையனைக் கண்டு பாடி நின்றேன். அவனோ பாடு பெறு பரிசிலன் வாடிச் செல்லுதல் நாடிழந்த தனினும் நனி இன்னாது எனக் கருதித் தன் தலை தரு

தற்காக வாளினைத் தந்தான்! யானும் அது பெற்றுப் பேருவகை யுடன் வருகின்றேன்'' என்றார். இச்சொற்கள் அவன் உள்ளத்தே சென்று பாய்ந்தன. நல் உணர்வு பெற்றான். அண்ணனுடன் கொண்ட பகைமை ஒழித்தான். காடு சென்று அவனைக் கண்டு தன் பிழைக்கு வருந்தினான். அவனை நாட்டில் இருத்தி அவன் வழி நின்றான். புறம் 165)

அறிவு நலமும் ஆட்சி நலமும் ஒருங்குடையவன் கோப் பெருஞ் சோழன். மானத்திற் கவரிமா அனையன்: மறமாண்பு களில் சான்றோர் மெய்ம் மறை. இத்தகு நல்லானின் பிள்ளைகள் இருவர். சிற்றினச் சேர்க்கையால் அறிவு பேதுற்றுத் தம் தந்தைபால் பகைமை கொண்டு போர்க்கெழுந்தனர். மான மீக்கூர்ந்த சோழனும் பொங்கியெழுந்தான். போரால் விளையும் தீங்குகளை எண்ணிப் பார்த்தார் புல்லாற்றூர் எயிற்றியனார். பகைமைப் பண்பு உள்ளத்தில் படிந்துவிட்டால், அண்ணனென் றும், தம்பியென்றும் பாராது, தந்தை என்றும், தாயென்றும் பாராது, கணவனென்றும் மனைவியென்றும்பாராது. அத்துணைக் கொடியது பகைமை. இதனை உணர்ந்த புலவர் சோழனைக்கண்டு "இவ்விருவரும் நினக்குப் பகைஞரும் அல்லர்; நீயும் அவனுக்குப் பகைவனல்லை! நினக்குப்பின் இவ்வரசுரிமை அவர்க்கே உரித் தன்றோ? நின் மக்கள் தோற்பின் நின் பெருஞ்செல்வம் அவரைத் தவிர யார்க்கு நல்குவை? நீ தோற்பின் பகைவர் உவப்பர். பழியே எஞ்சும். ஆதலின் போரினைத் தவிர்க'' என்றார். சோழ னும் போரை ஒழித்தான். மானம் பொறாது வடக்கிருந்து உயிர் துறந்தான். (புறம் 215)

சோழன் நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் அரசுரிமை பற்றி உண்டான பகைமைப் பூசலைக் கண்ட கோவூர்கிழார்,

''ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே'' (புறம் 45)

என்று கூறி இருவரையும் சந்து செய்வித்தார்.

பாண்டிய நாட்டுப் பறம்பு மலையை ஆண்ட பாரிவள்ளல் உலகு புரக்கும் பாரிபோல் கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடை யவன். இவன்புகழ், தமிழகமெங்கும் பரவக் கண்ட தமிழ்வேந்தர் மூவரும் அழுக்காறு கொண்டனர். அதன் பயனாய்ப் பகைமை

உற்றுப் போருடற்றினர். அதுகண்ட கபிலர், 'மூவேந்தர்களே! நீவிர் மூவிரும் முற்றினும், நும் முயற்சியால் பறம்பினைக்கொள்ள மாட்டீர். நும் வாள் வலியால் இதனைத் தாரான் பாரி! ஆடியும் பாடியும் வரின் நாடும் குன்றும் ஒருங்கே நுமக்கு ஈவன் எம் தலைவன்!'' என்றார். அங்ஙனமே மூவேந்தரும் சூழ்ச்சியால் பாரியைக் கொன்றனர். (புறம் 109) பாரி இறந்தபோது அவனுடைய பெண் மக்கள் இருவர் அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின் எந்தையும் உடையோம்'' என்று இரங்கிப் பாடும் அவலச் செய்யுளைப் படிக்கும்போது, பகைமை உணர்ச்சி, எத்துணைப் பெரிய வள்ளலைக் கொலை செய்யக் காரணமாய் இருந்தது என அறிந்து துயருறுகிறோம்.

நாட்டைப் பெரிதுபடுத்தவேண்டும்; தன் பேராண்மையைப் பலர்க்கும் புலப்படுத்தவேண்டும்; பகை நாடுகளை வென்று திறைப் பொருளால் தன் நாட்டின் நலன்களுக்குச் செலவிடவேண்டும் என்ற அவாவின் காரணமாகவும் பகைமை பிறக்கும்.

சோழன் கரிகாற் பெருவளத்தான், தன்னொடு பகைமை கொண்டு, போர்க்கு வந்த சேரமான் பெருஞ்சேரலாதன் என்பவனை வெண்ணிப் போர்க்களத்தில் வென்றான். அவனோடு துணையாக வந்த பாண்டியனையும் வென்றான் எனப் பொருநராற்றுப் படை புகல்கிறது. ஒரு காலத்தில் இவன் இமயமலை வரையிற் சென்று இடையிலுள்ள அரசர்களை வென்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் என்பான், பொருநர்க்காயினும், புலவர்க்கு ஆயினும் அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும் அடையா வாயிலை உடையவன். ஆனால் ஒன்னாதார்க்கோ அருங்கடை வாயிலை உடையவன். இவன் மட்டுமன்றி இவனுடைய படைத்தலைவர்களும் பேராண்மை மிக்கவர். ஓட ஓட விரட்டுவர். முடிவேந்தர் தம் அரண்களை அழிக்கும் ஆற்றலும் பெற்றவர். பகை நாட்டில் பெற்ற பொருளால் பாணர் துயர் போக்கி, எஞ்சிய பொருளைத் தம் அரசரிடம் தருவர் எனச் சிறுபாணாற்றுப்படை செப்புகிறது.

பெரும்பாணாற்றுப் படையின் தலைவனான தொண்டைமான் இளந்திரையன், முறை வேண்டுநர்க்கும், குறை வேண்டுநர்க்கும்

வேண்டுப, வேண்டுப வேண்டினர்க்கு அருளுபவன். ஆயினும் 'பகைவர் கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும் வென்றி'' உடையவன் என அறிகின்றோம். (பெரும்பா 449)

மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை என்ற நூல்களில் புகழப்படும் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், மண்ணாசையால் பகைமையுற்றுத் தலையாலங்கானம் என்னுமிடத்தில் கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையை வென்று அவனைச் சிறைப்படுத்தினான். அவனுக்குத் துணையாக வந்த சோழனையும், ஐந்து குறுநில மன்னரையும் வென்று முரசு கைக்கொண்டு களவேள்வி செய்தான். (ம. கா. 125—130)

சங்க இலக்கியத்துள் ஒன்றாகிய பதிற்றுப் பத்தினை நோக்கின் சேரப் பெருவேந்தர்களாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் முதலானவர்கள் பகைமேற் சென்று பெற்ற வென்றிச் சிறப்புக்களை விரிவாகக் காணலாம்.

கடுஞ்சொல் காரணமாகவும் பகைமை பிறக்கும். சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரத்தில் ''எம் போன்ற மன்னர் ஈங்கில்லை போலும்'' என்று கடுஞ்சொற் கூறிய கனகவிசயர்மீது பகைமையுற்றுப் போர்க்கெழுந்து வெற்றி கொண்ட செங்குட்டுவனின் மாண்பு விரிவாகப் பேசப் படுகின்றது.

இனி ஊழ்வினை காரணமாகவும் பகைமை தோன்றலாம் என்பதைக் கோவலன் கொலையுண்ட செய்தியால் அறிகிறோம்.

எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலான சங்க நூல்களின் வாயிலாகப் பகைமைபற்றி வரும் செய்திகளை விரிவாக அறிய முடிகின்றது.

பகைவரின் ஆழமான குளங்கள் முதலான நீர் நிலைகளை உடைத்து எறிதல், வளப்பமான வயல்களைக் கொள்ளைகொள்ளுதல், மனை மரங்களை விறகாக எரித்தல், காவல் மரத்தை வெட்டுதல், மதிற்கதவுகளைப் பிளத்தல், ஊரைத் தீயிட்டுக் கொளுத்தல், கழுதை நிரைகளைக்கொண்டு பகைவர் அரண்களை உழுது

பாழ்படுத்தல், பட்டத்து யானை துன்பத்தால் கதறும்படி கொம்பை வெட்டி முரசு கட்டில் செய்தல், யானையின் நெற்றிப் பட்டப் பொன்னால் பொற்றாமரை மலர் செய்து பாணர்க்குச் சூட்டுதல், பட்டத்து யானைகளைச் சகடத்திற்குக் கடாக்களைப் போலப் பூட்டுதல், பகைவர் முரசத்தைப் பறித்தல், பகைவரைப் பெண் பாலர் இகழ்ந்து, அவரது காலில் உள்ள வீரக் கழலையும் இடுப்பிலுள்ள போர்க்குரிய ஆடையையும் நீக்கிவிட்டுச் சிலம்பும் தழையும் அணிவித்தல்; பகையரசரைக் கொன்று அவரது மகுடத்தில் உள்ள பசும்பொன்னை எடுத்து வீரக்கழல் செய்தல்; பகைவரது நாட்டைக் கைக்கொண்டு பரிசிலர்க்கு இனியன செய்தல் முதலான பல்வேறு செய்திகளைச் சங்க இலக்கியம் எடுத்து இயம்புகிறது. சங்ககால மக்கள் போரில் பெருவிருப்பு உடையவராயிருந்ததனாலேயே தொல்காப்பியர் போருக்கெனத் தனி இலக்கணத்தையும் வகுத்துள்ளார் எனலாம்.

பகைமைபற்றி எழும் இத்தகைய போரிலும்கூட அறநெறியையும் பின்பற்றி இருந்தனர். புறமுதுகிட்டு ஓடுவோரைக் கொல்லல், படைக்கருவிகள் இழந்தாரோடு பொருதல், பசு, பார்ப்பார், பெண்டிர், பிணியுடையோர், வயது முதிர்ந்தோர், பிள்ளைப் பேறு அற்றோர் ஆகியோரைக் கொல்லல் அறநெறி ஆகாது எனக் கருதிக் கடியப்பட்டன. (புறம் 4)

சங்ககால அரசர்கள், நல்லமைச்சர்கள், நுண்மாண் நுழை புலமிக்க புலவர்கள், தறுகண்வீரர்கள் ஆகியோரைப் பெற்றிருந்தனர். குடிதழீஇக் கோலோச்சும் கொற்றவர்களாக விளங்கினர். அன்பும், அருளும், கல்வியும், கேள்வியும், நல்லொழுக்கமும், மெய்யுணர்வும் முதலான அரிய பண்புகளைப் பெற்றுக் குடிமக்களால் தெய்வமாகப் போற்றப்பட்டனர். இன்னோரன்ன பண்புகளால் அவர்கள் நம் சிந்தைக்கு இனியராகின்றனர். ஆனால் பகைவர் திறத்திலோ மிக்க கொடியவர்களாய்க் காட்சி அளிக்கின்றனர். தமக்கு அடங்காத அரசரைக் கருவறுப்பதில் சிறிதும் கண்ணோட்டமில்லாதவராய், அவர்களது நாட்டைப் பாழ்படுத்தியும் அவர்களைச் சிறையிலடைத்தும், கொன்றும், அவருடைய மனைவியரைப் பிடித்துக் கொணர்ந்தும் இன்னோரன்ன கொடுமைகள் செய்துள்ளனர். இவைகள் நம் நெஞ்சைப் பிளக்கின்றன. போரினால் உண்டாகும் அழிவுகளை அவ்வப்போது ஒரு சில

புலவர்கள் எடுத்துரைத்துத் திருத்தி உள்ளனர். எனினும் போரினால் உண்டாகும் வெற்றிக் களிப்பிற்குப் புலவர் பாடல்கள் பெரிதும் துணைநின்றன. உலக மக்கள் நல்வாழ்வு பெறுதற்கென்று செங்கோலைத் தாங்கும் மன்னர் கரங்கள், ஒரு சில மக்களை அழிப்பதற்குக் காரணமாகும் சிவந்த அம்பாகிய கோலையும் தாங்குமாயின் அதனை என்னென்பது? உலகின் இயல்பு இருந்தவாறு என்னே என்று இரங்கத் தோன்றுகிறது. நாகரிகமும் அறிவியலும் வளர்ந்த இக்காலத்திலும் இத்தகைய கொடுமைகளைக் காண்கின்றோமன்றோ?

மனிதன் தோன்றிய நாள்தொட்டு அவன்பால் நல்ல பண்புகளும் தீய பண்புகளும் விராவி இருப்பன காண்கின்றோம். அகத்திற்குப் புறமும், அறத்திற்கு மறமும், அறிவுக்கு அறியாமையும், இனிமைக்கு இன்னாமையும், உண்மைக்கு இன்மையும், உயர்வுக்குத் தாழ்வும், ஒளிக்கு இருளும், பெருமைக்குச் சிறுமையும் பெருக்கத்திற்குச் சுருக்கமும், விருப்புக்கு வெறுப்பும், இருப்பன போல நட்புக்குப் பகையும் இருந்துவருதல் கண்கூடு! ஒருவகையில் பார்த்தால் பகைமையும் தேவைதான். பசிக்குப் பகையாக, வறுமைக்குப் பகையாக, பிணிக்குப் பகையாக, அளவிலா ஆசைக்குப் பகையாக, வெகுளிக்குப் பகையாக, அறியாமைக்குப் பகையாக இருந்தால் நல்லது!

பகைமையால் பலர்க்கும் நன்மை விளையுமாயின் அப்பகைமையை விரும்பி ஏற்கலாம். தீமை பயக்குமாயின் அதனை வெறுத்து ஒதுக்கலே அறிவுடைமையாம். ஒவ்வொருவரும் தன் பெண்டு, பிள்ளை, வீடு, செல்வம் இவையுண்டு தானுண்டு என்னும் சின்னதொரு கடுகு உள்ளம் கொள்ளாமல், தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்டு திகழ்வார்களானால், பசியும், பிணியும் நீங்கப் பகையும் நீங்கும்; வசியும் வளனும் சுரக்கும்! இன்றைய உலகம் இதனைப் பின்பற்றுமா? *

* 19-5-1971-இல் திருச்சி வானொலிநிலையத்திற் பேசிய பேச்சு.

# அருணகிரிப் புராணம்.

—○—

## சுவடி விளக்கக் குறிப்பு.

மு. பிளாரன்சு கேதரின், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக் கழகம்.

பெயர்: அருணகிரிப் புராணம்; ஏடுகளின் அளவு: 15·7" × 1·4; வரி: (பக்கத்துக்கு): 8; சிலவற்றில் 9; மொத்தமுள்ள ஏடுகள்: 141; இல்லாத ஏடுகளின் எண்கள்: 7, 9, 21, 34, 35, 36, 39=7; பாதியாக எஞ்சியுள்ளவை: 30, 33, 37, 38, 40=5; சுவடியின் கடைசி எண்: 141.

தற்போது இந்தப் பிரதி திரு. இர. பன்னீர்ச்செல்வம் அவர்களிடமுள்ளது. முத்துசாமி (பழைய பாளையம் நாமக்கல்.) என்பவரால் அவருக்குத் தரப்பட்டதாகக் கூறினர்.

இதற்குப் பொழிப்புரையுள்ளது. எழுத்துப் பிழைகள் மிகுதியாக உள்ளன. (ஒருவர் சொல்ல வேறொருவர் எழுதியிருக்க வேண்டும் என்று எண்ணவும் இடமுள்ளது.) வேறு சுவடிகளை ஒப்பிட்டுப்பார்க்கவில்லை. எனினும் டாக்டர் உ.வே.சா. அவர்கள் தமது சுவடி விளக்கத்தில் 'அருணசல புராணம்' என்று குறிப்பிட்டு விளக்குவதனோடு ஒரு செய்யுளை ஒப்பிட முடிந்தது. அதில் பாட பேதங்கள் காணப்படுகின்றன. உரையிலும் விளக்கியும், சுருக்கியும் உள்ள பகுதிகள் உள்ளன. பேச்சு வழக்குச் சொற்களுக்குப் பின் வருவனவற்றைக் காட்டலாம்.

களிற்று—கழித்து என்று செய்யுளில் வருகின்றது. உரையில் தமிழ்—தமிள் என்று எழுதப் பெற்றுள்ளது. உரைப் பகுதியில் 'எண்டிசையோர்' என்பதற்கு இதில் 'அஷ்டவயிரவர்' என்று கூறப்படுகின்றது. அவர் காட்டிய உரையில் எட்டுத்திக்கு யானைகளைப்பற்றியும் விளக்கமாக உள்ளது.

இனி இதன் பெயரை ஐயரவர்கள் 'அருணசல புராணம்' என்று கூறியுள்ளார். சுவடி எண் 500-இல் 'அருசணல புராணம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றார். அவருக்குக்

கிடைத்த சுவடிகளில் காப்புச் செய்யுளும், பாயிரத் தெய்வ வணக்கமும் இல்லைபோலும்.

மேலும் இது அருணகிரி புராணம் என்பதும், இது வியாச முனிவர் வட மொழியில் செய்த கதையென்பதும்,

மிக்க வேத வியாசன் விளம்பிய
யிக்கதைக் கியலின் றருள் செயிதிட
முக்கண் வெற்பினை மும்மத வாரியைக்
கைக்க ழித்தினைக் கைதொழு தேற்றுவாம்.

என்ற இதன் காப்புச் செய்யுளால் உணரலாம். இதன் உரையில்

"மிகுந்த தவசுள்ள வேத வியாச மகாரிஷி ஆதி காலத்திலே இறந்த வாக்கியமாகச் சொல்லப்பட்ட அருணகிரிப் புராணத்தைத் தமிழினாலே பாட வேண்டி........."
என்று வரும் அடிகளால் இது மொழி பெயர்ப்பு (அல்லது தழுவல்) என்பதையும், பெயரையும் அறியலாம்.

பாயிரத் தெய்வ வணக்கம் 21 செய்யுட்களை உடையது. முதல் செய்யுள் பின்வருமாறு:

முதிருஞ்சுவை மதுரம்பெற பொழியுந்தமிழ் விரகன்புகழ்
பதிகம்புனை பவனம்பினர் பவபஞ்சன நமலன்கதி
ருதிரும்படி பகிரண்டமு முடையும்படி யிலகும்படி
யதிரும்படி நடனம்புரி யதிருங்கழ லதிருங்கழல்.

ஊரின் பெயர் அருணை வளம்பதி, அருணைகிரி, அருணை மா நகரம், அருணாசலம் என்று வழங்கப்பட்டுள்ளது. இன்று திருவண்ணாமலை என்று வழங்குகின்றது. இப்புராணத்தை ஐயரவர்கள் தல புராண வரிசையில் சேர்த்துள்ளனர். எனினும், அருணை கிரியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் வரலாறு கூறும் புராணமாகஇருக்கவேண்டும் என்பதைத் திரு. அவதாரச் சருக்கம், திருக்கண் புதைத்த சருக்கம், பாகம் பெற்ற சருக்கம் என்றவற்றால் அறியலாம். நூல் முழுவதையும் ஆராய்ந்தால் இதுபற்றிய விளக்கங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும்.

ஐயரவர்கள் குறிப்பின்படி இப்புராணத்தின் மொத்த முள்ள சருக்கங்கள் 14. பாடல்கள் 649. ஐயரவர்கள் சுவடியில்

ள்ளவை 586. இங்குக் குறிப்பிட்ட சுவடியின் விளக்கம்
ருமாறு:

| | | | |
|---|---|---|---|
| | காப்புச் செய்யுள் | 1 | |
| | பாயிரத் தெய்வ வணக்கம் | 21 | செய்யுட்கள். |
| 1. | அருணை மாநகரச் சருக்கம் | 55 | ,, |
| 2. | திருமலைச் சருக்கம் | 88 | ,, |
| 3. | திருவவதாரச் சருக்கம் | 91 | ,, |
| 4. | திருக்கண் புதைத்த சருக்கம் | 78 | ,, |
| 5. | பாகம் பெற்ற சருக்கம் | [40 செய்யுட்கள் வரை] | |

இவை ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியில் உள்ளகொளுக்களால் அறியப்படுபவை:

பாயிரத் தெய்வ வணக்கத் தைந்தில் திருத்தொண்டர் களைப்பற்றிய குறிப்புக் காணலாம். சேரமான் பெருமாள் ஆதி யுலாச் செய்தார் என்பது 'தெய்வ வுலாச் செயிதோன் திருவடி மேல் விழுந்து போற்றி, (13) என்ற பகுதியால் அறியலாம். இதில் உள்ள அவையடக்கச் செய்யுட்கள் படித்து இன்புறத் தக்கன.

"நீரிருக்குதெனப் பழித்து விடுத்தனரோ
அதுபாலினிக்கு மானுல்
காரிருக்குதெனக் கழித்து விடுத்தனரோ
அதுமலரை நண்ணுமா போல்
ஆறிருக்கு மதிமுடியார் விடமிருக்குந்
திருமிடத்தா ரருணைநாதர்
பேரிருக்குந் த]ை]கமை யினு லெனதுரையை
இகழுவரோ பெருமையோரே. (16)
அழுகுதரக் கனிந்தநச்சு மரம் பழைய
தெனிலுமதி லமுதுண் டாமோ
விழைவுதருஞ் சுவைக்கரும்பு புதியதுவே
யெனினுமது விரத மாமோ
இழிவகன்ற தமிழ்ச் சுவையும் பொருள்சுவையும்
அதுபோல விருக்குமல்லார்
பழமையென நலந்தருமே புதுமையென
இகழப்படுமோ பயன்கொள் வோர்க்கே (17)

———————

# ஆய்தம்.*

---

தமிழ் நெடுங்கணக்கில் ஆய்தவெழுத்து உயிரெழுத்துக்களோடு எண்ணப்படாமலும் மெய்யெழுத்துக்களோடு எண்ணப்படாமலும் தனித்து நிற்கிறது. மேலும், உயிரெழுத்துக்களைப் போல மேய்யெழுத்துக்களில் ஏருமலும் மெய்யெழுத்துக்களைப் போல உயிர்கள் ஏறுவதற்கு இடம் கொடாமலும் தனித்து நிற்கிறது. எழுத்துக்களுள் உயிரெழுத்துக்களின் குற்றெழுத்து நெட்டெழுத்து என்ற இரு பிரிவுகளில் குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரையும் நெட்டெழுத்துக்கள் இரண்டு மாத்திரைகளும் பெறுகின்றன. மெய்யெழுத்துக்கள் வல்லினம் மெல்லினம் இடையினம் என்று மூன்று பிரிவுபடினும் அவையனைத்தும் மாத்திரையளவில் வேறுபடாமல் தனித்தனி அரை மாத்திரையே பெறுகின்றன. ஆய்த எழுத்து மெய்யெழுத்துக்களைப் போல அரை மாத்திரை பெறுகிறது. தமிழ் மொழிக்கே சிறப்பாகவுடைய உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் அவ்வெழுத்துக்களாலாகிய சொற்களில் அதனதன் மாத்திரையளவைப் பெற்றுெலிக்கின்றன. உலக வழக்குச் சொற்களிலன்றிச் செய்யுள் வழக்குச் சொற்களிலும் அதனதன் மாத்திரையைப் பெற்றே ஒலிக்கின்றன. உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் அவற்ருலாகிய சொற்களில் தம்தம் மாத்திரையைப் பெற்றுெலிப்பதுபோல ஆய்தம் இருவழக்குச் சொற்களிலும் தன் மாத்திரை அளவில் ஒலிப்பதில்லை. இக்காரணங்களால் ஆய்தம் தனி நிலை என்று பெயர் பெறுகிறது.

செய்யுள் வழக்கில் 'தேரினுமஃதே துணை' என்ற குறளில் ஆய்தம் தனிக் குறிலை யடுத்து நேரசையாய் அரை மாத்திரை பெற்றுெலிக்கிறது. 'யாண்டு மஃதொப்ப தில்' என்ற குறளில் ஆய்தம் தனிக் குறிலை அடுத்து இயற்சீர் வெண்டளை பெறுவ

---

* இக்கட்டுரை, காலஞ்சென்ற, தமிழ்ப் புலவர் வை. கோவிந்த மூப்பனுரவர்கள் 'செந்தமிழ்' இதழுக்காக எழுதித்தந்தது.

தற்கு நிரையசையாய்த் தன் அரை மாத்திரையின் மிக்கு ஒரு மாத்திரை பெற்ருெலிக்கிறது.

செய்யுளில் உயிர் நெட்டெழுத்துக்களும் மெய் யெழுத்துக்களும் செய்யுளின் ஓசை குறைந்த விடத்து அதன் ஓசையை நிரப்புவதற்குத் தம் தம் மாத்திரையளவின் மிக்கொலித்து அளபெடை யெழுத்துக்களாகின்றன. அவற்றைப்போல ஆய்தமும் செய்யுளில் மிக்கொலித்து அளபெடை யெழுத்தாகிறது.

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் சொற்களில் உயிரெழுத்துக்களுள் நெடிலும் குறிலும் மெய்யெழுத்துக்களுள் சிலவும் அதனதன் மாத்திரையில் குறைந்தொலித்துக் குறுக்க எழுத்துக்களாகின்றன. ஆய்தமும் அவற்றைப்போல் அதன் மாத்திரையில் குறைந்தொலித்துக் குறுக்க எழுத்தாகிறது.

(எ-டு) தென்னை — ஐகாரக் குறுக்கம்.
ஔவை—ஔகாரக் குறுக்கம்.
பந்து—குற்றிய லுகரம்.
போன்ம்—மகரக் குறுக்கம்.
முஃடீது, கஃறீது—ஆய்தக் குறுக்கம்.

குற்றியலுகரம் நெடிற்ருெடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், வன்ருெடர்க்குற்றியலுகரம், மென்ருெடர்க் குற்றியலுகரம், இடைத் தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் என ஆறு வகைப்படுகின்றன. அவ்வாறு குற்றியலுகரங்களிலும் இருக்கும் அயலெழுத்துக்கள், உயிரெழுத்து மெய்யெழுத்து ஆய்தவெழுத்து என்ற மூவகையுள் அடங்கும். குற்றியலுகர அயலெழுத்துக்களில் உயிரும் மெய்யும் போல ஆய்தமும் இருத்தல் காண்க.

குற்றியலுகரம் வல்லின மெய்கள் ஆறன் மேலும் ஏறி மொழிகளின் ஈற்றில் வருகிறது. அவ்வாறன் வல்லின மெய்களின் மேலும் ஏறிவரும் குற்றிய லுகரங்கள் ஆறினுக்கும் ஆய்தம் அயலெழுத்தாக வருகிறது.

எ-டு. எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு.
(யாப்பருங்கல விருத்தி மேற்கோள்கள்)

புணர்ச்சியில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் நிலைமொழியாக நின்று வருமொழி நாற்கணங்களோடு புணர்கின்றன. ஆய்தம் மொழியிடையில் வருதலன்றி மொழி முதலெழுத்தாகவும் ஈற்றெழுத்தாகவும் வராமையினால் உயிரெழுத்துக்களைப்போலவும் மெய்யெழுத்துக்களைப் போலவும் இயல்புப் புணர்ச்சியையோ விகாரப் புணர்ச்சியையோ பெறுதலில்லை. எனினும் புணரியலில் ஆய்தம் இடம் பெறாமல் நீங்கிவிடவில்லை. நிலைமொழியீற்று இடையினமெய்யெழுத்துக்களாகிய வகரவொற்றும், லகரவொற்றும், ளகரவொற்றும் வருமொழி முதலில் உள்ள வல்லினம் வந்து புணருமிடத்து ஆய்தவெழுத்துக்களாகத் திரிகின்றன.

எ-டு. அவ்+கடிய=அஃகடிய
கல்+தீது=கஃறீது
முள்+தீது=முஃடீது

அஃது என்ற ஆய்தக் குற்றியலுகர நிலைமொழி ஐ முதலிய வேற்றுமையுருபுகளோடு புணருமிடத்து அன்சாரியை பெற்றுப் புணரும். அங்ஙனம் புணருமிடத்து நிலைமொழியின் ஈற்றயலாய் தம் (ஃ) கெட்டுவிடுகிறது.

எ-டு. அஃகு+ஐ=அதனை

ஒருமை என்ற நிலைமொழியோடு பத்து என்ற வருமொழி வந்து புணருமிடத்து வருமொழியின் தகரவொற்று ஆய்தமாகத் திரிகிறது.

எ-டு. ஒருமை+பத்து=ஒருபஃது

ஒரு பஃது என்ற தொகை மொழிக்கு ஒருமை நிலை மொழியாதலை யான் எழுதிய தமிழர் வாழ்க்கை சமயம் என்ற நூலில் காண்க.

செய்யுளில் வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல் விரித்தல், தொகுத்தல் என்ற அறுவகை விகாரங்களுள்ளன.

எ-டு. குறுத்தாட் பூதம். குறுந்தாட்பூதம் என்பதன் வலித்தல் விகாரம்.

தண்டை யினக்கிளி. தட்டை யென்பதன்
மெலித்தல் விகாரம்.

போத்தரூர் புல்லறிவினர். பொத்தரூர் என்பதன்
நீட்டல் விகாரம்.

நன்றென்றேன்றியேன். தீயேன் என்பதன்
குறுக்கல் விகாரம்.

நெல்விளை யும்மே. விளையுமே என்பதன்
விரித்தல் விகாரம்.

தொட்டனைத் தூறும். தொட்ட என்பதன்
தொகுத்தல் விகாரம்.

அறுவகை விகாரங்களுள் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக் களும் விகாரமடைதல்போலத் 'தேர்ந்துசெய் வஃதே முறை' என் பதில் ஆய்தம் விரித்தல் விகாரமாக வந்திருத்தல் காண்க.

இங்கே கூறப்பட்ட செய்திகள் தமிழ் இலக்கண நூல் களுள் ஆய்தவெழுத்தைப்பற்றியும் அது வரும் தனிமொழி தொடர்மொழிகளைப்பற்றியுமாம். இனி ஆய்த எழுத்தின் சிறப் பியல்பைக் காண்போம்.

(1) எஃகு கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு என்ற தனி மொழிகளில் ஆய்தம் குற்றியலுகரம் ஏறிய ஆறு வல்லின மெய் யெழுத்துக்களுக்கும் அயலெழுத்தாக வருகிறது. வல்லொற்றுக் கள் அதன் அதன் மெய் ஏறி குற்றியலுகரங்களுக்கும், மெல் லொற்றுக்கள் அதன் அதன் இனமெய் ஏறிய குற்றிய லுகரங் களுக்கும், இடை யொற்றுக்கள் சில குற்றியலுகரங்களுக்கும் அயலெழுத்தாக வருதல் தமிழ்மொழி மரபாம். குற்றிய லுகரங் களில் ஆய்தம் ஆறு வல்லின மெய்களுக்கும் அயலெழுத்தாக வருதல் தமிழ் மொழியில் காணப்படும் புதுமையாம்.

(2) அஃகடிய. கஃறீது. முஃடீது என்ற தொடர் மொழி களில் இடையின மெய்களாகிய லகர, ளகரங்களின் திரிதல் விகார எழுத்தாக ஆய்தம் வல்லின உயிர்மெய்களுக்கு அயலெழுத் தாகவருகிறது.

(3) ஒரு பஃது என்ற தொடர்மொழியில் ஆய்தம் தகர

வொற்றின் திரிதல் விகார எழுத்தாகக் குற்றியலுகரம் ஏறிய தகர மெய்யின் அயலெழுத்தாக வருகிறது.

(4) செய்வஃதே என்ற தனி மொழியிலோ ஏகார இடைச் சொல் ஏறிய தொடர் மொழியிலோ வல்லின உயிர் மெய் எழுத்தின் அயலெழுத்தாக வருகிறது.

மேலே எடுத்துக்காட்டிய நால்வகை எடுத்துக்காட்டுக் களிலும் ஆய்தம் வல்லின உயிர்மெய்களை அடுத்து வருவதே அதன் சிறப்பியல்பாம். மெல்லின இடையின உயிர்மெய்யெழுத் துக்களோடு வாராமையும் அதன் சிறப்பியல்பாம்.

தமிழ்ச் சொற்களுள் வல்லின மெய்யெழுத்துக்களை ஈற்றில் கொண்ட சொற்கள் இல்லை. உயிரெழுத்துக்களையும் மெல் லின இடையின மெய்யெழுத்துக்களையும் ஈற்றில் கொண்ட சொற்கள் பலவுள்ளன உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக் களையும் ஈற்றில் கொண்ட சொற்கள் நிலை மொழிகளாக நிற்க வருமொழி முதலெழுத்துக்களாகிய நாற்கணமும் புணர்வது புணர்ச்சியாம்.

கல் + தீது = கற்றீது
கள் = தீது = கட்டீது

என்பனவற்றில் நிலைமொழி லகர ளகர இடையின மெய்கள் வரு மொழி வல்லினம் புணருமிடத்து வல்லினச் சார்பால் இடையின மெய்கள் வல்லின மெய்களாகத் திரிதல் தமிழ்மொழி மரபாம்.

கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது

என்பனவற்றில் நிலை மொழி லகர ளகர இடையின மெய்கள் வருமொழி வல்லினம் வந்து புணருமிடத்து வல்லினச் சார்பால் இடையின மெய்கள் வல்லின மெய்களாகாமல் இனமல்லாத ஆய்த வெழுத்தாதல் தமிழ்மொழியில் காணப்படும்புதுமையாம்.

மருந்து + சட்டி = மருத்துச்சட்டி

வேம்பு + மரம் = வேப்ப மரம்

என்பனவற்றில் நிலை மொழி யிடையிலுள்ள மெல்லின மெய்கள் வருமொழி வந்து புணருமிடத்து வல்லின மெய்களாகத் திரிதல் தமிழ் மொழி மரபாம்.

ஒருமை+பத்து=ஒருபஃது

என்பதில் நிலைமொழி யெழுத்துக் கெடுதல் தமிழ்மொழி மரபாம். வருமொழித் தகரம் ஆய்தமாகத் திரிதல் தமிழ் மொழியில் காணப்படும் புதுமையாம்.

நெல் விளையுமே என்பது நெல் விளையும்மே என்று மகர மெய் தன்னருகே மற்றொரு மகர மெய்யை விரித்து வருதல் விரித்தல் விகாரமாம். ஒரு சொல்லிலுள்ள மெய் தன்னையொத்த மற்றொரு மெய்யை விரித்தல் தமிழ் மொழி மரபாம்.

தேர்ந்து செய்வஃதே முறை என்பதிலுள்ள செய்வஃதே என்பதில் தகர மெய் தன்னையொத்த மற்றொரு தகரத்தை விரிக்காமல் தன்னினமல்லாத ஆய்த வெழுத்தை விரித்தல் தமிழ் மொழியில் காணப்படும் புதுமையாம்.

மேலே கூறிய புதுமைகள் தமிழ்மொழி எழுத்துக்களிலுள்ள ஒருண்மையைப் புலப்படுத்துகின்றன.

பூ+செடி=பூச்செடி யென்று புணரும் அத் தொடர் மொழி மெல்லோசையால் இனிமைப்படுவதற்குப் பூஞ்செடி என்று வரும். கற்றீது, முட்டீது, ஒரு பத்து, செய்வத்தே (முறை) என்ற வல்லோசை மொழிகளும் மெல்லோசையால் இனிமைப்படுவதற்குக் கஃறீது, முஃடீது ஒரு பஃது, செய்வஃதே (முறை) என்று வருகின்றன.

பூச்செடி என்பது பூஞ்செடி என்று வருமிடத்துச் சகர மெய் அதன் இனமாகிய ஞகரமாகத் திரிதலால் மெல்லோசையால் இனிமைப்படுகிறது. கஃறீது முதலியவற்றில் வல்லின மெய் மெல்லின மெய்யாகத் திரியாமையின் மெல்லோசைப்

படுகின்றன என்பது பொருந்தாது என்பது தடை.

எஃகு என்பது எஹ்கு என்று எச்கு என்ற வல்லோசைச் சொல்லினும் மெல்லோசைப்படுகிறது. கஃசு என்பது கஸ்சு என்று கச்சு என்ற வல்லோசைச் சொல்லினும் மெல்லோசைப் படுகிறது. ஹகரமும் ஸகரமும் வடமொழி வல்லின எழுத்துக் களின் வல்லோசையிற் குறைந்த மெல்லோசை எழுத்துக்கள். வல்லின மெய்யெழுத்துக்களுக்கு அயலில் நிற்கும் ஆய்தம் அதனைத் தொடர்ந்துவரும் வல்லின மெய்யெழுத்துக்களின் மெல்லோசையையுடைய எழுத்தாம். ஆய்தம் ஒன்றே அதனைத் தொடர்ந்து வரும் க ச ட த ப ற என்ற ஆறு வல்லின மெய் யெழுத்துக்களுக்கும் அதனதன் மெல்லோசை யெழுத்தாய் அறு வகை யொலிகளோடு மெல்லோசைப்படுகிறது. க் ச் ட் த் ப் ற் என்ற வல்லோசை எழுத்துக்களுக்கு ஜ̣ ஜ̣ ¬̣ ஜ̣ ர̣ ய̣ என்ற தலைகீழ் வடிவ எழுத்துக்களை மெல்லோசை எழுத்துக்களாகக் குறியீடு செய்துகொள்க. பின்வரும் ஆய்தத்தொடர் மொழிகளை மேலே காட்டிய வல்லின மெல்லோசைக் குறியீட்டெழுத்துக் களால் எழுதி மெல்லோசைப்படுத்தி யொலித்து வல்லின மெய் யெழுத்துக்கள் ஆறும் அவை தொடர்ந்த மொழிகளும் மெல் லோசைப்பட்டு மெல்லோசைகளால் இனிமைப்படுதலைப் பின் வருவனவற்றால் காண்க,

எஃகு = எஜ̣கு, கஃசு = கஜ̣சு, கஃடு = க¬̣டு, கஃது = கஜ̣டு,
கஃபு = கர̣பு, கஃறு = கய̣று, அஃகடிய = அஜ̣கடிய,
கஃறீது = கய̣றீது, முஃடீது = மு¬̣டீது, ஒரு பஃது =
ஒரு பஜ̣து, செய்வஃதே = செய்வஜ̣தே.

கல் + தீது, முள் + தீது என்பனவற்றிலுள்ள லகரமும் ளகரமும் வருமொழி வல்லினச் சார்பால் ஆய்தமாகத் திரிந்த விடத்து நிலைமொழிகளும் வருமொழிகளும் கஃதீது, முஃதீது என்று புணரலாம். ஆய்தம் மொழியில் தகரத்தோடு மயங்காத தன்று. அஃது, இஃது, உஃது என்பனவற்றில் ஆய்தம் தகர மெய்யெழுத்தோடு மயங்குதல் காண்க. கஃறீது முஃடீது என்று

வல்லின மெய்கள் திரிந்து புணருவதால் அத்தொடர்களிலுள்ள றகரவுயிர்மெய் எழுத்தும் டகரவுயிர்மெய் எழுத்தும் தங்களுக்கு முன்னிற்கும் ஆய்தம் முறையே றகர வல்லொலி எழுத்தாதலையும் டகர வல்லொலி எழுத்தாதலையும் தெரிவிக்கின்றன. கற்றீது. முட்டீது என்ற ஆய்த வொலித்தொடர்கள் மெல்லோசைப்பட்டு மெல்லோசைகளால் இனிமைப்படுதலையும் காண்க.

ஆய்த மொழிகளில் காணப்படுகின்ற புதுமைகள் ஆய்தம் ஒன்றே அதனைத் தொடர்ந்துவரும் ஆறு வல்லின மெய் யெழுத்துக்களுக்கும் அதனதன் மெல்லோசை யெழுத்தாய் அறு வகையொலிகளோடு மெல்லோசைப்பட்டுப் பண்டைக்காலத்தில் இருவகை வழக்கினும் இயங்கிற்று என்ற உண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றன.



இலக்கணத் தந்தை டாக்டர் திரு. சி. இலக்குவனார் அவர்களுக்குச்
சங்கத் துணைத் தலைவர் திரு. ஆர். செல்லத்தேவர் அவர்கள்
பொன்னாடை போர்த்தி மகிழும் காட்சி.

# பாராட்டுப் பெற்றவரும் பாராட்டியவர்களும்



உட்கார்ந்திருப்பவர்கள் : திரு. ஆர். வி. நாராயணன், எம். ஏ., (முதல்வர்). திரு. கே. கந்தசாமி, பி.ஏ., பி எல்., எம்.எல்.ஏ. (ஆட்சிக்குழு உறுப்பினர்). இலக்கணச் செம்மல். டாக்டர். திரு. சி. இலக்குவனார். திரு. ஆர். செல்லத்தேவர், பி. ஏ., பி. எல்., (துணைத் தலைவர்). திரு. எம். தனுக்கோடி, பி. ஏ., பி. எல்., (தாளாளர்). திரு. எம். சங்கரபாண்டியன், பி. ஏ., பி. எல்., (ஆட்சிக்குழு உறுப்பினர்).

நிற்பவர்கள் : பண்டித வித்துவான், திரு. ச. சாம்பசிவம், (விரிவுரையாளர்). பண்டிதவித்துவான், திரு. மு. உலகநாதன் (விரிவுரையாளர்). திரு. வ. நாகமணி, (ஆட்சிக்குழு உறுப்பினர்). வித்துவான், திரு. V. C. சீனிவாசன், (விரிவுரையாளர்). திரு. ஆ. ஆண்டியப்பன், (ஆட்சிக்குழு உறுப்பினர்) திரு. எஸ். கருப்பையா, (மேலாளர்). திரு. கோவிந்தராசன், (எழுத்தர்).

**சங்கச் செய்திகள் :**

# தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுத் தீர்மானங்கள்

———ஃ———

1. திரு. வே. அ. வேலுச்சாமி அவர்கள் தமது செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டதால், துணைத் தலைவர் திரு. ஆர். செல்லத்தேவர், பி ஏ , பி. எல் அவர்களுக்குத் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்புக்களைக் கவனித்து வருவதற்கு தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு தற்காலிகமாக அதிகாரம் அளிக்கின்றது.

2. மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பெறும் புலவர் கல்லூரி, செந்தமிழ்க் கலைக்கல்லூரி ஆகியவற்றிற்குத் தாளாளராகத் திரு. எம். தனுக்கோடி, பி, ஏ., பி. ஏல். அவர்களைத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு தேர்ந்தெடுக்கின்றது.

3. உசிலைத் தொகுதியில் நடைபெற்ற சட்டப் பேரவை உறுப்பினர் இடைத் தேர்தலில் மிகப் பெரும்பான்மையான வாக்குகள் பெற்று வெற்றி வாகை சூடிய தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் திரு. K. கந்தசாமி, B. A., B. L., M. L. A., அவர்களைத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு மகிழ்ச்சியுடன் உளமாரப் பாராட்டுகிறது.

# டாக்டர் சி. இலக்குவனர் அவர்களுக்குப் பாராட்டு விழா

—O—

கிழக்காசிய நாடுகளுக்குத் தமிழ்த் தூது செல்லவிருக்கும் உயர்திரு. டாக்டர் சி. இலக்குவனர் அவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 10—9—71-ல் வழியனுப்புப் பாராட்டுவிழா நடைபெற்றது.

தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு மா. சங்கர பாண்டியன், பி. ஏ., பி. எல்., அவர்கள் வரவேற்றுப் பேசும் போது, வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள், முன்னொரு

நாள் மதுரை மாநகர் எங்கும் தேடிப்பார்த்தும் திருக்குறள் போன்ற சங்ககாலச் சான்றோர் இலக்கியங்கள் கிடைக்கப் பெறுமையால் உளம் நொந்து, நல்ல தமிழ் இலக்கியங்கள் எல்லார்க்கும் கிடைக்கச் செய்யவும், நற்றமிழை நாள்தோறும் பரப்பவும், இந் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். கன்னித் தமிழ் மொழியைக் கற்பிக்கக் கல்லூரி ஒன்றையும் தொடங்கி வைத்தார்கள்.

அந்த நல்ல நோக்கங்களைத் தடையில்லாது நடைபெறச் செய்யத் தமிழ்ச் சங்க நிருவாகத்தை நாங்கள் ஏற்றுள்ளோம் கிழக்காசிய நாடுகளில் செந்தமிழ் மொழியின் சீர்மையினை எடுத்து விளக்கச், செல்லவிருக்கும் இலக்கணச் செம்மல் டாக்டர் சி. இலக்குவனார் அவர்களுக்குப் பாராட்டுவிழா நடாத்தி வழியனுப்புவதில் தமிழ்ச் சங்கம் பெருமைகொள்கிறது என்று கூறி விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்கள்.

செந்தமிழ்க் கல்லூரித் தாளாளர் திரு. எம். தனுக்கோடி அவர்கள் டாக்டர் அவர்களுக்குப் பாராட்டிதழ் படித்து அளித்தார்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவரும், விழாத் தலைவரும் ஆகிய திரு. ஆர், செல்லத் தேவர், பி. ஏ., பி. எல், அவர்கள் வாழ்த்திப் பேசும்போது ''தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு பரப்பக் கீழை நாடுகளுக்கு நமது டாக்டர் அவர்கள் செல்லவிருப்பது தமிழ்ப் பயணம், கலாச்சாரப் பயணம் ஆகும்; தமிழ் பரப்பும் உயர்ந்த நோக்கத்திற்கு நல்ல வாய்ப்பும் ஆகும்'' என்று குறிப்பிட்டார்கள். மேலும் அங்குக்காணும் தமிழ்எழுச்சியையும் பண்பாட்டின் மேன்மைகளையும் அவ்வப்போது டாக்டர் அவர்கள் எழுதவேண்டும் என்றும், தமிழ்ச் சங்கம் அவற்றை இங்குத் தமிழ் ஏடுகளில் வெளியிட்டு மக்களுக்குப் பரப்பும் என்றும்குறிப்பிட்டார்கள். மேலும், இலக்கணச் செம்மல் இலக்குவனார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்கள்.

திரு கே. கந்தசாமி, பி. ஏ., பி. எல்., எம்.எல்.ஏ., (தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்) அவர்கள் பாராட்டிப் பேசும் போது ''நான் அண்மையில் தந்தையை இழந்தவன்; டாக்டர்

ஐயா அவர்களைக் காணும்போது தந்தையைக் காண்பதுபோல் மன அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது என்றும், இலக்குவனர் அவர்கள் 1965-ல் தமிழ் காக்க இந்தியை எதிர்த்துச் சிறைசென்றார்கள் என்றும் பல இன்னல்கள் அடைந்தார்கள் என்றும் சிறந்த தெய்வ நம்பிக்கை இருந்த காரணத்தால் அவற்றை ஊக்கமுடன் தாங்கிக்கொண்டார்கள்'' என்றும் கூறினார்கள்.

டாக்டர் சி. இலக்குவனர் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசும்போது ''கீழை நாடுகளில் எனக்குத் தெரிந்த நண்பர்கள் பலர் இருக்கின்றார்கள். எனவே அங்கு முதலில் செல்கிறேன். மேலும் வாய்ப்பு ஏற்படும்போது மேற்கு நாடுகளுக்கும் செல்வேன். வெளிநாடுகளில் தமிழ்மொழியின் உண்மையான வரலாறு பரவவில்லை; தமிழின் மெய்ப்புகழ் தெரியவில்லை. அவற்றைத் தெளிவாகவும் விளக்கமாகவும் அங்கு எடுத்துச் சொல்வேன்.

உலகில் பலமொழிகள் தோன்றுவதற்குமுன் இங்குத்தமிழ் பிறந்தது, வளர்ந்தது, மதுரை மாநகரில் தமிழ்ச் சங்கம் தோன்றியது. மாங்குடி மருதன் தலைமை தாங்க ஆயிரக்கணக்கான புலவர்கள் அங்குத் தங்கித் தமிழ் ஆராய்ந்தார்கள். அதற்குச் சான்றாக,

''உலகமொடு நிலவிய, பலர் புகழ் சிறப்பின்,
மாங்குடி மருதன் தலைவனாக''— என்ற புறநானூற்றுப் பாடலையும் எடுத்துக் காட்டினார்கள்.

மேலும் டாக்டர் அவர்கள் பேசும்போது எனக்கு இறை நம்பிக்கை உண்டு, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையில் நிற்பவன் நான். தெய்வ நம்பிக்கை வேறு; புராணக்கதைகள் வேறு; புராணக் கதைகளை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதில்லை.

நாம், இன்று நமக்குப் புரியாத வடமொழியில் அர்ச்சனைகள் செய்கின்றோம்; இறைவனைப் போற்றுகிறோம். வாழ்த்துகின்றோம், நல்ல தமிழால் நாளும் இறைவனை வணங்கவேண்டும். தமிழ் நாட்டுத் திருக்கோவில்களில் தமிழ் மொழியில் அர்ச்சனை நடைபெற வேண்டும்.

தமிழ் மொழியில் அர்ச்சனைக்குரிய பாக்கள் நிறைய உள்ளன. மாணிக்கவாசகர் பாடிய "போற்றித் திரு அகவல்" என்ற இலக்கியமே போதுமானதாகும் நான் வெளிநாடுசென்று வந்தபின் தமிழ் அர்ச்சனை தமிழ் நாட்டில் நடைபெறுவிடில், அதற்காகப் போராட்டம் ஒன்று தொடங்குவேன். அப்போராட்டத்தில் தமிழ் அன்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறேன்"—என்று அறிவித்தார்கள்.

அதுபோன்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் 49 தமிழ் அறிஞர்களை மதிப்பியல் புலவர்களாகச் சேர்த்து ஒரு மன்றம் இச்சங்கத்தில் அமைக்கவேண்டும். அப்புலவர் மன்றம் தமிழ் நாட்டில் வெளியாகும் நல்ல நல்ல நூல்களை நாடி அறிந்து அவற்றிற்குப் பரிசளித்துச் சிறப்புச் செய்தல் வேண்டும் பயிற்சி மொழி என்ற தமிழ்நாடு அரசினரின் கொள்கையினைத் தமிழ்ச் சங்கம் பலவகையிலும் முயன்று பரப்புதல் வேண்டும். தனித்தமிழ் இயக்கத்தை இச்சங்கமே முன்னின்று நடாத்துதல் வேண்டும். இன்ன பிற நற்செயல்களை இத்தமிழ்ச் சங்கம் ஏற்று நடத்துமாயின், தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் உதவி இச்சங்கத்திற்கு உறுதியாகக் கிடைக்கும். பொது மக்களின் ஆதரவும் இச்சங்கத்திற்குப் பெருகும்.

வடநாட்டிலுள்ள "சாந்திநிகேதன், விசுவபாரதி" போன்று இத் தமிழ்ச் சங்கம் வளர்தல் வேண்டும்.

நான் கீழை நாடுகளில் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிப் பேசுவேன்; நிதியும் சேர்ப்பேன், நிதியோடு வருவேன்.

திரும்பி வந்தபின் ஒரு பாராட்டுவிழா நடாத்தி என்னைப் பாராட்டியவர்களைச் சிறப்பிப்பதுடன், ஒரு நூல் வெளியிட்டு அவர்கள் பெயர்களை அதில் வெளியிடுவேன்" என்று தனது எதிர்கால வேலைத் திட்டங்களையும் வெளியிட்டார்.

மதுரைத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுவினர் ரூ. 300–ம்; செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் சார்பில் 101-ம், செந்தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் திரு. வி. சி. சீனிவாசன் அவர்கள் ரூ. 101–ம், திரு. பி. சி. மார்த்

தாண்டம் அவர்கள் ரூ. 11-ம் திரு. அன்புதேவி ரூ. 5-ம் டாக்டர் அவர்களுக்கு அன்பளிப்புத் தந்தனர்.

மேலும் திரு. காவேரிமணியம் எம். எல். ஏ. அவர்களும் திரு. செகதீசன் அவர்களும், திரு. புலவர் வேலவன் அவர்களும் திரு. அன்பு கருணையானந்தா அவர்களும், திரு. கவிஞர் பேகன் அவர்களும், திரு புலவர் இளங்குமரன் அவர்களும் டாக்டர் அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டிப் பேசினர்.

முடிவில் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

# தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்குப் பாராட்டு விழா.

27—9—71 அன்று சோவியத் நாடு சென்று திரும்பிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்குத் தமிழ்ச் சங்கத்தில் பாராட்டு விழா துணைத் தலைவர் திரு. ஆர். செல்லத்தேவர், பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் பாராட்டிப் பேசும்போது, அடிகளார் அவர்கள் சமயத் துறையில் மட்டுமே அல்லாது அரசியல் துறையிலும், தமிழ் மொழி காக்கும் சேவையிலும் சிறந்து விளங்குகிறார்கள் என்று கூறினார்கள்.

செந்தமிழ்க் கல்லூரித் தாளாளர், திரு. தனுக்கோடி, பி. ஏ., பி. எல்., அவர்கள் பேசும்போது, தமிழ் நாட்டுத் திருக்கோவில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெறவேண்டும். அந்த நல்லகுறிக்கோளை அடைவதற்கு அடிகளார் அவர்கள் ஏற்கனவே பாடுபட்டு வருகின்றார்கள். அடிகளார் அவர்கள் மேலும் அதற்குப் பாடுபடவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்கள்.

மேலும் பல அன்பர்கள் அடிகளாரைப் பாராட்டிப் பேசினார்கள். தவத்திரு அடிகளார் அவர்கள் ஒரு மணி நேரம்

சோவியத் நாடு பற்றியும், தமிழ் அர்ச்சனை பற்றியும் நல்லதோர் விளக்கம் தந்து பேசும்போது, சோவியத் நாட்டில் மாசுகோ நகரில் பேசும்போது ''நமது சமயத்தின் உயர்ந்த தத்துவங்களை யும், சீரிய கொள்கைகளையும் எடுத்து விளக்கினேன்; அவர்கள் அத்தத்துவங்களும், கொள்கைகளும் நடைமுறையில் உள்ளனவா என்று வினவினர்கள். அப்போது நான் வருந்தி னேன். எனவே சமய அறிஞர்களும், தொண்டர்களும் சாதி வேறுபாடுகளையும், பொருளாதார வேறுபாடுகளையும் போக்குவ தற்குப் பாடுபடவேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

மேலும் அவர்கள் ''தமிழில் அர்ச்சனை நடைபெறவேண் டும் என்பது நமது நீண்டகால அவா ஆகும். வேற்று மொழியில் வழிபாடுகளும், அர்ச்சனைகளும் நடைபெறுவதால் பக்தர்கள் தங்கள் உணர்ச்சிகளை முழுமையாகக் காட்ட இயலவில்லை. தமிழ் மொழியில் நடைபெற்றால் பக்தி பெருகும்; சமயநெறி வளரும் என்று தமிழ் அர்ச்சனையை வலியுறுத்திப் பேசினர்கள். தமிழ்ச் சங்கப் பாராட்டிதழைச் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் அடிகளார்க்குப் படித்தளித்தார்கள்.

நாட்டுப்பண்ணோடு கூட்டம் இனிதாக நிறைவுபெற்றது.

### கலைமகள் விழா—தமிழ் வழிபாடு.

—O—

29—9—71 அன்று இவ்வாண்டு தமிழ்ச் சங்கத்தில் கலைமகள் விழா நடைபெற்றது. அவ்வமயம் வழிபாடுகள் எல்லாம் தமிழ் மொழியில் நடைபெற்றன. தமிழ்ப் பாடல்கள் பாடப்பெற்றன.

# மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.

அஞ்சல் பெட்டி எண். 215.

---

## தேர்வு நடத்துவதற்கான செலவு விபரம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தேர்வு நடைபெறும் செலவுக்கெனக் கீழ்க்கண்ட விவரப்படி அன்பளிப்புத் தரப்படும்.

| தேர்வெழுதும் மாணவர் எண்ணிக்கை. | மேற்பார்வையாளர் எண்ணிக்கை | தேர்வுச் செலவு ரூ. | காசு | விடைத் தாட்களை அனுப்பும்செலவு ரூ. | காசு | ஆக மொத்தச் செலவு ரூ. | காசு |
|---|---|---|---|---|---|---|---|
| 15—30 | 1 | 6 | 00 | 2 | 50 | 8 | 50 |
| 31—50 | 2 | 8 | 00 | 2 | 50 | 10 | 50 |
| 51—75 | 3 | 12 | 00 | 3 | 00 | 15 | 00 |
| 76-100 | 4 | 15 | 00 | 3 | 00 | 18 | 00 |
| 101-125 | 5 | 18 | 00 | 3 | 50 | 21 | 50 |
| 126-150 | 6 | 21 | 00 | 3 | 50 | 24 | 50 |
| 151-175 | 7 | 24 | 00 | 4 | 00 | 28 | 00 |
| 176-200 | 8 | 30 | 00 | 4 | 50 | 34 | 50 |
| 201-250 | 9 | 35 | 00 | 5 | 50 | 40 | 50 |

1. மாணவர் தம் எண்ணிக்கைக்கு ஏற்ப மேலே கண்ட விவரப்படிப் பணத்தைப் பிடித்துக்கொண்டு, எஞ்சிய தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

2. பிடித்துக்கொண்ட தொகையிலிருந்து, இரண்டு வேளை நடைபெறும் தேர்வுக்கு 3 ரூபாயும், ஒரு வேளை நடைபெறும் தேர்வுக்கு ரூ. 1-50ம் மேற்பார்வையாளர் ஒவ்வொருவருக்குந் தரவேண்டும்.

3. எஞ்சியுள்ள தொகையைப் பணியாளர்கட்குக்

கொடுத்தல். விடைத் தாட் கட்டு அனுப்புவதற்கான, அஞ்சல் லாரி அல்லது இரயில் கட்டணச் செலவு கட்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

4. விண்ணப்பம் அனுப்புதல், பணம் அனுப்புதல் போன்ற செலவுகளை மாணவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. தங்கள் பள்ளியில் தேர்வு எழுதாமல் வேறு பள்ளிக் சென்று தேர்வெழுதும் மாணவர்கட்குரிய கட்டணத் தொகை யைச் சிறிதும் பிடித்துக் கொள்ளாமல் முழுவதுமாக அனுப்பி வைக்கவேண்டும்.

6. தேர்வெழுதும் மாணவர் விவரப்பட்டியலில் இரண்டு படிகள் அனுப்பி வைக்கவேண்டும்.

7. கட்டணமும் பட்டியலும் அனுப்பும்போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரவு செலவு விவரத்தாளை நிறைவு செய்து அனுப்பவேண்டும்.

8. 15 மாணவர்க்குக் குறைவாகத் தேர்வெழுதும் மாண வர்களைச் சேர்ந்த பள்ளிகள் செலவுத்தொகையேதும் பிடித்துக் கொள்ளாமல் தொகை முழுவதும் அனுப்பிவிட வேண்டும். தேர்வுச் செலவினை அப்பள்ளி மாணவரிடமே வசூலித்துக் கொள்ளவேண்டும்.

# இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

வாழ்க தமிழ் ! வளர்க சங்கப்பணி !

அன்புடையீர்,

வணக்கம்.

வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யும் நோக்கமுடன் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். அன்று ஆட்சி புரிந்த ஆங்கில அரசும், பல்கலைக் கழகங்களும் தமிழைப் புறக் கணித்த காலம். கன்னித் தமிழ் காக்க ''தமிழ்க் கலாசாலை'' ஒன்றைத் தேவரவர்கள் அன்றே அமைத்தார்கள். மாணவர் களுக்கு இனிய தமிழை இலவசமாகக் கற்பித்தார்கள். ''செந்தமிழ்'' என்னும் திங்களிதழ் வாயிலாகவும், நற்றமிழ்நூல் பல வெளியிடுதல் மூலமாகவும் தமிழறிவை உலகெங்கும் பரப்பி னார்கள். திரு. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், நாவலர் திரு. அரசஞ் சண்முகனார், திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. மு. இராகவ அய்யங்கார், திரு. கார்மேகக்கோனார் முதலிய தமிழ் அறிஞர்களை இங்கு அமரச்செய்து சங்ககாலத்தமிழாராய்ச்சியை வளர்த்தார்கள். இவ்வாறு அல்லும் பகலும் அயராது உழைத்து அருந்தமிழ் வளர்த்த வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர் களுக்கு மதுரைமாநகரில் சிலையொன்று எழுப்பிச் சிறப்புச்செய்ய முடிவு செய்துள்ளோம். மேலும் தேவரவர்களுடைய தொண்டு தடையின்றி நடைபெறத் தமிழ் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் திட்டங்கள் பல தீட்டியுள்ளோம்.

நற்றமிழை நாள்தோறும் பரப்பும் நற்பணியில் ஈடுபட் டுள்ள செந்தமிழ் வல்ல சான்றோர்களே, கல்லூரி முதல்வர்களே, பேராசிரியர்களே, பயிற்சிப்பள்ளி, உயர்நிலைப்பள்ளித் தலைமை யாசிரியர்களே, தமிழாசிரியர்களே, நீவிர் அனைவரும் மேற்கண்ட எங்கள் பணிக்கு உங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்கு மாறு வேண்டுகின்றோம். மிகப் பெரும்பான்மையான மாணவர் களைத் தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ்த் தேர்வுகளில் கலந்து கொள்ளச் செய்து எங்கள் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும்

தந்துதவ வேண்டுகின்றோம். தேர்வுபற்றிய குறிப்புகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மிக்க நன்றி!

தங்களன்புள்ள,

மதுரை,
15—10—71

ஆர். செல்லத் தேவர்,
துணைத் தலைவர்.

# மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.

—:—

## தேர்வுபற்றிய குறிப்புகள்.

**தேர்வின் அமைப்பும் பயனும் :**

உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளி, கல்லூரிகளிற் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியில் போதிய புலமை பெறுவதற்கு இத்தேர்வுகள் துணைபுரிகின்றன. அரசாங்கத் தேர்வுகளும் பல்கலைக் கழகத் தேர்வுகளும் எந்த முறையில் நடைபெறுகின்றனவோ, அந்த முறையிலேயே இச் சங்கத் தேர்வுகளும் நடைபெறுகின்றன. பல்கலைக் கழகத்தினர், அரசாங்கத்தினர் கேட்கும் முறைகளைப் பின்பற்றியே, வினாத்தாளின் நேரம், வினாக்களின் அமைப்பு முறை முதலியன கொண்டு இச்சங்க வினாத் அமைக்கப்படுகின்றன. எனவே மாணவர்கட்குத் தேர்வு எழுதுவதில் நல்ல பயிற்சியும், அனுபவமும் ஏற்பட்டு விடுகின்றன.

அரசாங்கத் தேர்வு, பல்கலைக் கழகத் தேர்வு இவற்றிற்கு முன்னதாகவே இச்சங்கத் தேர்வுகள் நடத்தப்பெற்று உரிய மதிப்பெண்களும், சான்றிதழ்களும் அனுப்பப்படுகின்றன. ஆதலின் மாணவர்கள், அவற்றைக்கொண்டு மேலும் படித்து நிறைய மதிப்பெண்கள் பெறுவதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்படுகின்றது.

**1. தேர்வு முடிவுகள் :**

இத்தேர்வின் முடிவுகள், அரசாங்கம் அல்லது பல்கலைக்

கழகத்தார் நடத்தும் தேர்வுகட்கு முன்னதாவே, மாணவர்கட்கு அறிவிக்கப்படும்.

## 2. சான்றிதழ்கள்:

தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கட்குரிய சான்றிதழ்கள் பள்ளி அல்லது கல்லூரி விடுமுறைக் காலத்திற்கு முன்னதாகவே தலைமையாசிரியர் அல்லது முதல்வருக்கு அனுப்பி வைக்கப்படும். மாணவர்கள் தங்களுக்குரிய சான்றிதழ்களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**சான்றிதழின் சிறப்பு:**

இச்சங்கச் சான்றிதழ்ப் பெற்றிருப்போர், படிப்பை முடித்தபின், அரசாங்க அலுவலுக்கோ அன்றி வேறுவேலைக்கோ செல்லுங்காலத்து அவர்கள் சிறப்புத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். மேலும் இச்சங்கத்துச் சான்றிதழ் வைத்திருப்போர்க்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

**பரிசுகள்:**

மாநில அளவில், முதல் இடம் பெறும் உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளி, கல்லூரித் தேர்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு இவ்வாண்டு முதல் ஒவ்வொரு பிரிவிற்கும் பரிசுகள் அளிக்க முடிவு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | ... | ரூ. | 100 00 |
| இரண்டாம் பரிசு | ... | ரூ. | 50 00 |
| மூன்றாம் பரிசு | ... | ரூ. | 25 00 |

(சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களுக்குத் தனித்தனிப் பரிசுகள் அளிக்கப்படும்.)

**விடைத்தாள் திருத்தத்திற்குரிய அன்பளிப்பில் மேலும் உயர்வு :**

| | தாள் ஒன்றுக்கு | பழைய அன்பளிப்பு |
|---|---|---|
| பதினோராம் வகுப்பு | 50 காசுகள் | 40 காசுகள் |
| பயிற்சிப்பள்ளி | 50 காசுகள் | ,, |
| புகுமுக வகுப்பு | 55 காசுகள் | ,, |
| பட்ட வகுப்பு | 60 காசுகள் | ,, |

விடைத்தாள் திருத்துவதற்கு உரிய அன்பளிப்பை உயர்த்தும்படி நண்பர்கள் கேட்டுக்கொண்டதை நிறைவேற்றி இருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் நன்றி!

**ஆர். செல்லத்தேவர்,**
துணைத் தலைவர்,
**மதுரைத் தமிழ்ச் சங்கம்.**

மதுரை,
15—10—71

Form.-3. (வரவு செலவு விபரத்தாள்)

# மதுரைத் தமிழ்ச் சங்கம்

அஞ்சல் பெட்டி எண், 215. மதுரை-1.

---

பள்ளி / கல்லூரி ____________________

முகவரி ____________________

மாவட்டம் ____________________

## தமிழ்ச் சங்கம் தேர்வு 197

**தேர்வு எழுதும் மாணவர் எண்ணிக்கை**

1. S. S. L. C. (Academic) ..........
2. S. S. L. C. (Bifurcated) ..........
3. Training ..........
4. P. U. C II Part ..........
5. P. U. C. (Adv. Tamil) ..........
6. B. A., B. Sc., ..........

சங்க விதிகளின்படி:

மாணவர்களிடம் பெற்றுக்கொண்ட கட்டணத் தொகை ரூ. ..........

மேற்பார்வைச் செலவு ரூ. ..........

விடைத்தாட்கள் அனுப்பும் செலவு ரூ. ..........

ஆகச் செலவு ரூ.

செலவு நீக்கிச் சங்கத்திற்கு அனுப்பிய தொகை ரூ.

அனுப்பிய பணவிடை அல்லது காசோலை விவரம் }

நாள் ..........   கையொப்பம்.

சரி பார்த்தவர் கையொப்பம்:

# மதுரைத் தமிழ்ச் சங்கம்

**1972 உயர்பள்ளி, பயிற்சிப் பள்ளி, தமிழ்த் தேர்வுகள்**

——(o)——

## காலஅட்டவணை

| வகுப்புகள் | தேர்வு நாள் | நேரம் |
|---|---|---|
| 1. உயர்பள்ளி இறுதி வகுப்பு (Standard XI) | 29—1—72 | காலை 10—12½<br>மாலை 2—4½ |
| 2. பயிற்சிப் பள்ளி (Training School) | 29—1—72 | காலை 10—12 |

**தேர்வுக் கட்டணங்கள்**

1. பள்ளி இறுதி வகுப்பு:

| | |
|---|---|
| பொதுத் தமிழ் (Academic Course) | 2—00 |
| தொழிற் பிரிவு (Diversified Course) | 1—00 |

2. பயிற்சிப் பள்ளி 1—25

## கட்டணங்கள் செலுத்தவேண்டிய இறுதி நாள்: 20 - I - 1972

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

**ஆர். செல்லத் தேவர்,**

துணைத்தலைவர்,

**மதுரைத் தமிழ்ச் சங்கம்,**

*தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.*

COPY OF THE

# Proceedings of the Director of Secondary Education, Madras - 6.

R. Dis. 166528/65 dated 22—12—1965.

## GOVERNMENT OF MADRAS

Education and Public Health Department,
Memorandum No. 105974 E-3/65-2 Education, dated 15—12—65.

Sub: Schools-Secondary Schools-Utilisation of buildings for conducting Tamil Examination by Madurai Tamil Sangam-Orders Passed.

Ref: From the Director of Secondary Education, Roc. No. 1666528, E-4/65 dated 16—10—65.

There is no objection to the utilisation of the building furniture etc., of the educational institutions such as High Schools and Training Schools (under the Government, local body and private managements) in this State for conducting Tamil Examination under the auspices of the Madurai Tamil Sangam, Madurai.

(Sd.) J. ANJANI DAYANAND,
Deputy Secretary to Government.

# Office of the District Educational Officer

## PONDICHERRY

No. D. E. O. 288/D 1/Exam/67. Dt. 17—1—67.

## MEMORANDUM

Sub: Conduct of Tests in Tamil by the Madurai Tamil Sangam in this Territory-Permission Accorded.

Res: (S/C) 310 IP/5 of the Director of Public Instruction Pondicherry dated, 11—1—67.

It has been informed by the Director of Public Instruction that the Department have no objection to the Conduct of Tamil Test in all the High Schools of this Territory.

Hence all the Headmasters of High Schools in Pondicherry and Karaikal Regions are permited to conduct the above said Test in their Schools.

(Sd.) N. MUTHUKRISHNAN,
District Educational Office,
PONDICHERRY

# மதுரைத் தமிழ்ச் சங்கம்
# 1972 கல்லூரி தமிழ்த் தேர்வுகள்
## கால அட்டவணை

| வகுப்புகள் | | தேர்வு நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | கல்லூரி முதனிலை வகுப்பு (P. U. C.) கலை வகுப்பு B. A. (I, II Papers) | 5—2—72 | காலை 10— 1<br>மாலை 2— 5 |
| 2. | முதனிலை சிறப்பு (P. U. C. Adv.) கலை வகுப்பு B. A. III Paper | 7—2—72 | காலை 10—1 |
| 3. | B. A. Ist year | 7—2—72 | காலை 10—1 |

## தேர்வுக் கட்டணங்கள்

| | ரூ, பை |
|---|---|
| 1. கல்லூரி — முதனிலை (P. U. C.) | |
| இரண்டாம் பிரிவு | 2—50 |
| சிறப்புத் தமிழ் (Adv.) | 1—25 |
| (முதலாண்டு) பட்டப்படிப்பு (B. A., B. Sc,) | 1—50 |
| (இரண்டாமாண்டு) பட்டப்படிப்பு (B. A., B. Sc.) | 2—75 |

## கட்டணங்கள் செலுத்த வேண்டிய இறுதிநாள்
## 20–1–1972

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆர். செல்லத்தேவர்,
துணைத்தலைவர்,
**மதுரைத் தமிழ்ச் சங்கம்,**
தமிழ்ச்சங்கத் தெரு, மதுரை-1.